01[ST] JANUARY 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 63 | பக்கங்கள் - 15 | editor.uthayam@gmail.com




## மக்களாட்சியினை உருவாக்க அரசியல் கலாசாரத்தில் பாரிய மாற்றம்

**புத்தாண்டு வாழ்த்து செய்தியில் ஜனாதிபதி!**

மக்கள் எதிர்பார்க்கும் சிறந்த ஆட்சியொன்றை உருவாக்கும் நோக்கில்

02ம் பக்கம்பார்க்க...

# ஹஜ் கோட்டா பகிர்வுக்கு ஐவர் கொண்ட குழு நியமனம்

**3500 கோட்டாக்களைப் பகிர நடவடிக்கை!**

**நேர்முகத் தேர்வு ஜனவரி 5 முதல் 10 வரை!!**

இலங்கைக்கு இந்த ஆண்டு கிடைக்கப் பெற்றுள்ள 3500 ஹஜ் கோட்டாக்களையும் முகவர் நிலையங்களிடையே பகிர்ந்தளிப்பதற்கான துரித நடவடிக்கைகளை சமய விவகார அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இதனடிப்படையில் ஹஜ் கோட்டாக்களை ஹஜ் முகவர்களிடையே பகிர்ந்தளிப்பதற்கென ஐவரடங்கிய குழுவொன்றினை சமய விவகார கலாச்சார அமைச்சு நியமித்துள்ளது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் முஹம்மத் ஸமீல் தலைமையிலான இக் குழுவில் மூன்று பெரும்பான்மையின அதிகாரிகளும் இரண்டு முஸ்லிம் அதிகாரிகளும் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் இக் குழு கோட்டாக்களைப் பகிர்ந்தளிப்பதற்கான துரித நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது.

3500 கோட்டாக்களையும் ஹஜ் முகவர்களிடையே பகிர்ந்தளிக்கும வகையில் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிறு முதல் 10 ஆம் திகதி

02ம் பக்கம்பார்க்க...

## அரசாங்கத்தின் முதலாவது பட்ஜெட் பெப்ரவரி 17ல் சமர்ப்பிப்பு

ஆளும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டம் பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு யோசனை (பாதீடு) மீதான

03ம் பக்கம்பார்க்க...

## Clean sri lanka திட்டம் ஆரம்பம்; வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை கட்டியெழுப்புவதே இதன் நோக்கம்

**ஜனாதிபதி அனுர குமார**

'Clean Srilanka' (க்ளீன் ஸ்ரீலங்கா) திட்டத்தின் ஊடாக வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை முழுமையாக மீள கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

க்ளீன் ஸ்ரீலங்கா திட்டத்தை இன்று புதன்கிழமை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது, புதிய

03ம் பக்கம்பார்க்க...

## வியாழக்கிழமை முதல் ரஜப் மாதம் ஆரம்பம்

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

ஹிஜ்ரி 1446 ரஜப் மாதத்திற்கான தலைப்பிறை பார்க்கும் மாநாடு நேற்று டிசம்பர் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை கொழும்பு

02ம் பக்கம்பார்க்க...

## ஹஜ் தொடர்பான சட்டத்தினை உருவாக்க நடவடிக்கை

**- ஹஜ் குழுத் தலைவர் ரியாஸ் மிஹிலார் -**



புனித ஹஜ் விவகாரங்களில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள், மோசடிகள், குறைபாடுகள் உட்பட பல்வேறு விடயங்களைக் கருத்திற் கொண்டு ஹஜ்ஜுக்கான சட்டமொன்றினை கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை புதிய ஹஜ் குழு முன்னெடுக்குமென பிரபல பட்டயக் கணக்காளரும் ஹஜ் குழுவின் புதிய தலைவருமான ரியாஸ் மிஹிலார் தெரிவித்தார்.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஹஜ் குழு உறுப்பினர்கள் மற்றும் ஹஜ் முகவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற பேதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

03ம் பக்கம்பார்க்க...

## பேதங்களை மறந்து நாட்டை கட்டியெழுப்ப ஒன்றுபடுவோம்



குறுகிய பேதங்களுக்கு அப்பாற்பட்டு நாட்டைக் கட்டியெழுப்பும் தேசியப் பணிக்கு ஆயத்தமாக வேண்டும்.

வெளிப்படைத்தன்மையுடன் நாட்டுக்கும் மக்களுக்கும் பொறுப்புக்கூறக்கூடிய உன்னத சேவையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசியல் தலைவர்கள் மற்றும் அரச

12ம் பக்கம்பார்க்க...

## Gem sri Lanka 2025 சர்வதேச இரத்தினக்கல் கண்காட்சி

**ஜனவரி 08 முதல் 10 வரை**



(பீ.எம் முக்தார்)

பேருவளை சீனங்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்கத்தின் பூரண ஏற்பாட்டிலும், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் பூரண அனுசரணையுடனும் "GEM SRI LANKA 2025" சர்வதேச மாணிக்கக் கல் மற்றும் ஆபரண கண்காட்சிக்கான ஏற்பாடுகள் மும்முரமாக

02ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில் வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/- ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும்

இது உங்கள் வங்கி Amãna Bank

## வியாழக்கிழமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)




பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது.

இதன்போது நாட்டின் எப்பாகத்திலும் தலைப் பிறை தென்படாததால் இலங்கை வாழ் மக்கள் புனித ஜுமாதுல் ஆகிரஹ் மாதத்தை இன்று புதன்கிழமை ஜனவரி 01ஆம் திகதி 30ஆக பூர்த்தி செய்து நாளை மஹ்ரிபு தொழுகையுடன் புனித ரஜப் மாதம் ஆரம்பமாகின்றது என கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பிறைக் குழுவின் பிரதித் தலைவர் மௌலவி அல் மஹ்தூமி ஏ.எல்.எம்.ரிழா (அல் ஹஸனி) உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

கொழும்பு பெரிய பள்ளிவாசலின் ஏற்பாட்டில் அதன் தலைவர் தாஹிர் ரஷீன் தலைமையில் இடம்பெற்ற மாநாட்டில் பெரிய பள்ளிவாவசலின் பிறைக்கு குழு உறுப்பினர்கள், அகில இலங்கை ஜமிய்யதுல் உலமா சபையின் தலைவர் உள்ளிட்ட பிரதிநிதிகள், கொழும்பு பெரிய பள்ளிவாசலின் நம்பிக்கையாளர்கள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள அதிகாரிகள், வளிமண்டவியல் திணைக்கள அதிகாரி, ஸ்ரீ லங்கா ஷரீஆ கவுன்சில் பிரதிநிதிகள், ஏனைய பள்ளிவாசல்கள், தரீக்காக்கள், ஸாவியாக்ளின் பிரதிநிதிகள் மேமன் சங்க பிரதி நிதிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது புனித மிஹ்ராஜ் இரவை எதிர் வரும் ஜனவரி 27ஆம் திகதி மாலை செவ்வாய் இரவு அனுஷ்டிப்பது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## GEM...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த சர்வதேச கண்காட்சியானது எதிர்வரும் 2025 ஜனவரி 08, 09 மற்றும் 10 ஆகிய தினங்களில் ஊஐடீயேுஆழுடீ டீநுவேழுவயு டீநுயுஊடீ - ஞஐபுயேுவருசுநு ஞநுடுநுஊவுஐழுடீ உழுவுநுடு இல் மிக விமர்சையாக நடைபெறவுள்ளது.

மேலும் இக்கண்காட்சியில் இலங்கையின் முன்னணி இரத்தினக்கல் பிரபல வியாபாரிகள், உள்நாட்டு, வெளிநாட்டு மாணிக்க கல் பிரபல ஏற்றுமதியாளர்கள் உட்பட பல துறை சார்ந்த பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கையின் மாணிக்க கல் வர்த்தகத்தை சர்வதேச மட்டத்திற்கு எடுத்துச் செல்லும் முயற்சியாக 02வது தடவையாகவும் இக்கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01வது கண்காட்சி நடைபெற்றதோடு, உள்நாட்டு, வெளிநாட்டு முன்னணி இரத்தினக்கல் வர்த்தகர்கள் கலந்து கொண்டனர்.

சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்க தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அல்-ஹாஜ் மர்ஜான் பளீல், "GEM SRI LANKA" தலைவர் அல்-ஹாஜ் ஹில்மி காஸ ிம் உட்பட சங்க உறுப்பினர்களின் முழுமையான ஒத்துழைப்போடும் 2024 கண்காட்சி மிக வெற்றிகரமாக நடைபெற்றமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## ஹஜ் கோட்டா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளிக்கிழமை வரை ஹஜ் முகவர்களுக்கான நேர்முகத் தேர்வு இடம்பெறவுள்ளது.

இந் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் முகவர்களுக்கான கோட்டாக்கள் உரிய முறையில் பகிரப்படவுள்ளன. ஹஜ் கோட்டா பகிர்வு நிறைவடைந்ததன் பின் இப் பகிர்வு தொடர்பான பூரண அறிக்கை எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் புதிதாக நியமிக்கப்பட்டுளள்ள ஹஜ் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான ஹஜ் கோட்டாக்கள் ஏற்கெனவே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த நிலையில் அதில் மோசடிகள் இடம்பெற்றதாக ஒரு சில ஹஜ் முகவர்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்திருந்தனர்.

இவ் வழக்கினை விசாரித்த உயர்நீதிமன்றம் மீண்டும் கோட்டாக்களை உரிய முறையில் பகிர்ந்தளிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டிருந்தது.

## மக்களாட்சியினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் கலாசாரத்தில் பாரிய மாற்றத்தை மேற்கொண்டு துரிதமாக செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆங்கிலப் புத்தாண்டை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

“நாடும் நாட்டு மக்களும் பல தசாப்த காலமாகக் கண்ட நல்ல கனவுகள் நனவாகும் புதிய யுகத்தின் உதயத்துடன், 2025 புத்தாண்டில் இலங்கையர்களாகிய நாம் அடியெடுத்து வைக்கின்றோம்.

வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய நான்கு திசைகளையும் இணைத்து அனைத்து மக்களின் நம்பிக்கையையும் பெற்று 2024ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைக்க எம்மால் முடிந்தது.

அதற்கிணங்க, மக்கள் எதிர்பார்க்கும் சிறந்த ஆட்சியொன்றை உருவாக்கும் நோக்கில் அன்றிருந்த அரசியல் கலாசாரத்தில் பாரிய மாற்றத்தை மேற்கொண்டு, மக்கள் ஆணையின் பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு நாம் தற்போது துரிதமாக செயற்பட்டு வருகின்றோம்.

கிராமிய வறுமையை ஒழித்தல், ‘கிளீன் ஸ்ரீலங்கா’ திட்டம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் ஆகியவை நாட்டின் முன்னணி அபிவிருத்தித் தேவைகளாக நாம் அடையாளம் கண்டுள்ளோம்.

அந்தப் பின்னணியில் சமூக, சுற்றாடல் மற்றும் நெறிமுறை புத்தெழுச்சியின் ஊடாக சமூகத்தை மேலும் மேம்பட்ட நிலைக்கு உயர்த்தும் நோக்கில் “கிளீன் ஸ்ரீலங்கா” வேலைத்திட்டம் புத்தாண்டு உதயத்துடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த பரிமாற்றரீதியான அபிவிருத்திச் செயற்பாடுகளின் ஊடாக நாடென்ற ரீதியில் நாம் 2024 ஆம் ஆண்டில் நாம் அடைந்த பொருளாதார ஸ்திரத்தன்மையை மேலும் உறுதிப்படுத்த இருக்கிறோம்.

அனைவருக்கும் “வளமான நாடு அழகான வாழ்வை” பெற்றுக் கொடுப்பதற்காக புதிய மனப்பாங்குகளை மேம்படுத்தி, புதிய உறுதிப்பாடுகளை மனதில் கொண்டு சகோதரத்துவத்துடன் முன்னோக்கி வருவதற்கு 2025 புதுவருட உதயத்துடன் சிறந்த வாய்ப்பு உருவாகியிருப்பதாக நான் உறுதியாக நம்புகிறேன்.

சுதந்திரத்தின் பின்னர் இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக மக்கள் நேய அரசாங்கத்தை உருவாக்கி, அனைத்து மக்களும் ஒன்றிணைந்த அபிவிருத்தியடைந்த இலங்கை பற்றிய கனவை நனவாக்கும் வாய்ப்பு உங்களுக்கும் எமக்கும் கிடைத் அனைவரின் தோள்களிலும் சுமத்தப்பட்டுள்ளது. அந்தப் பொறுப்பு குறித்து எங்களுக்கு நல்ல புரிதல் உள்ளது.

இந்த நூற்றாண்டின் தவறவிட்ட சாதனைகளை மீண்டும் நாட்டுக்கு வென்று கொடுக்கவும் மக்களின் கனவுகளை நனவாக்கவும், 2025ஆம் ஆண்டு புத்தாண்டில் மேலும் வீரியத்துடனும் உறுதியுடனும் அர்ப்பணிக்க நடவடிக்கை எடுப்போம்.

தேசிய மறுமலர்ச்சிக்காக எங்களுடன் இணைந்து பங்காற்றும் உங்கள் அனைவருக்கும் செழுமையும் ஒற்றுமையும் புதிய நம்பிக்கையும் நிறைந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!






## Clean...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

வருடத்தில் புதிய பரிணாமத்திற்கு செல்லவேண்டிய சவால் அரசாங்கத்திற்கு காணப்படுகிறது. குறித்த சவாலை நிறைவேற்றுவதற்கு முழு அரசியல் அதிகாரமும் துணை நிற்கும்.

புதிய அரசியல் கலாசாரத்தின் கீழ்தான் புதிய வருடம் ஆரம்பமாகிறது. மக்களுக்கு எதிராக அனைத்து அரசியல் நடவடிக்கைகளும் தோல்விகண்டுள்ளன.

எமது பொருளாதாரம் கடந்த பல தசாப்தங்களாக பாரிய வீழ்ச்சியை அடைந்திருந்தது. பொருளாதாரம் அதளபாதாளத்தில் வீழ்ந்திருந்தது. தற்போது பொருளாதாரத்தை ஓரளவு ஸ்தரிப்படுத்தியுள்ளோம். புதிய வருடத்தில் பொருளாதார வளர்ச்சியை அடைய எதிர்பார்க்கிறோம்.

நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளோம். அருகம்பவை மையப்படுத்தி தாக்குதல் நடத்த உள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. எமது பாதுகாப்பு துறை அந்த முயற்சியை தோல்வியடைய செய்திருந்தனர். எமது நாட்டில் நீதியை நிலைநாட்டும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. அரசியல் அதிகாரத்துக்கு மேல் உள்ளவர்கள் சட்டத்தையும் அரசியலமைப்பையும் மீறியிருந்தனர்.

நாட்டில் மீண்டும் சட்டவாட்சியை ஏற்படுத்த நாம் அர்ப்பணிப்புடன் செயல்படுகிறோம். அதேபோன்று ஊழல் - மோசடிகள் புற்றுநோயை போன்று முழு நாட்டிலும் ஒட்டிக்கொண்டுள்ளது. அதனை ஒழிக்க நாம் பாரிய முயற்சிகள் எடுத்துள்ளோம்.

குற்றப்புலனாய்வு பிரிவு, பொலிஸார் மற்றும் பாதுகாப்பு தரப்பினர் இதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவார்கள் என எதிர்பார்க்கிறோம். அரசியல்வாதிகளாக நாம் அதற்கான முன்னுதாரணங்களை காண்பித்துள்ளோம். ஆனால், அரசியல்வாதிகளின் முன்னுதாரணம் மாத்திரம் போதாது. அரசியல் நிறுவனங்களின் முழுமையான கட்டமைப்பும் இதற்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

மூன்று பிரதான விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தியுள்ளோம். வறுமையில் உள்ளவர்களை அதிலிருந்து மீட்டெடுக்க வேண்டும். பொருளாதாரம் சிறியதொரு தரப்பினரிடம் இருக்கும் போது அந்தப் பொருளாதாரம் வளர்ச்சியடையாது.

வரவு - செலவுத் திட்டத்தில் புதிய பொருளாதாரத் திட்டங்கள் முன்மொழியப்படும்.

இரண்டவாது ஊழல் மோசடியை ஒழிக்க நாட்டியை டிஜிட்டல்மயப்படுத்த வேண்டும். அடுத்தப்படியாக கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம். இதன் ஊடாக சுற்று சூழலை சுத்தப்படுத்துவது மாத்திரமல்ல நோக்கம்.

வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை முழுமையாக மீள கட்டியெழுப்புவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்." என்றார்.

## அரசாங்கத்தின்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

விவாதம் 2025 பெப்ரவரி 18 முதல் மார்ச் 21, வரை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தீர்மானம், சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நேற்று (31) நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதேநேரத்தில், 2025ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு யோசனையை முதல் வாசிப்புக்காக 2025 ஜனவரி 09ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு

அதன்படி, ஒதுக்கீட்டு யோசனையின் இரண்டாவது வாசிப்பு பெப்ரவரி 17 ஆம் திகதி நடைபெற உள்ளது.

இரண்டாவது வாசிப்புக்கான விவாதத்தை பெப்ரவரி 18 முதல் 25 வரை 7 நாட்களுக்கு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அதன் பின்னர், யோசனையின் இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு பெப்ரவரி 25 ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

வரவுசெலவுத் திட்ட விவாதம்

ஒதுக்கீட்டு யோசனை மீதான குழுநிலை விவாதம் 2025 பெப்ரவரி 27 முதல் மார்ச் 21 வரை 4 சனிக்கிழமைகள் உட்பட 19 நாட்களுக்கு நடைபெற உள்ளது.

இதேவேளை, ஒதுக்கீட்டு யோசனையின் மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பை மார்ச் 21 ஆம் திகதியன்று மாலை 6.00 மணிக்கு நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பாதீட்டு காலத்தில், வாய்மொழி பதில்களுக்கான 5 கேள்விகளுக்கு முற்பகல் 9.30 மணி முதல் 10.00 மணி வரை நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது, மேலும் வரவுசெலவுத் திட்ட விவாதம் முற்பகல் 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெறவுள்ளது.

## ஹஜ் தொடர்பான...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இதன் போது ஹஜ் முகவர்களுக்கு புதிய ஹஜ் குழு உறுப்பினர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

இங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட ஹஜ் குழுத் தலைவர், புனிதமான ஹஜ் கடமையை ஹாஜிகள் சீராகவும்,சிறப்பாகவும் செய்வதற்கான சகல வசதிகளையும் முகவர்கள் செய்து கொடுக்க வேண்டும்.அதன் பொருட்டு ஹஜ் குழு முன்னெடுக்கும சகல நடவடிக்கைகளுக்கும் முகவர்கள் முழுமையான ஒத்துழைப்பினை வழங்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

## அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

**(இப்னு தவ்பீக் ஆலீம்)**

ஷைத்தானின் காலடிச் சுவடு

"விசுவாசிகளே ஷைத்தானின் காலடிச் சுவடுகளைப் பின்பற்றாதீர்கள். (ஏனென்றால்) எவன் ஷைத்தானுடைய காலடிச் சுவடுகளைப் பின்பற்றிச் செல்கிறானோ அவனை ஷைத்தான் மானக்கேடான விஷயங்களையும், மானக்கேடான காரியங்களையும் செய்யும்படி நிச்சயமாக ஏவிக் கொண்டே இருப்பான்." (24:21)

அல்லாஹ்வின் மன்னிப்புக்கான வழி

"உங்களில் பொருள் அருளப் பெற்றோரும், (பிறருக்கு உதவி செய்ய) இயல்புடையோரும் தங்கள் பந்துக்களுக்கோ, ஏழைகளுக்கோ, அல்லாஹ்வுடைய பாதையில் ஹிஜ்ரத் செய்தவர்களுக்கோ (யாதொன்றுமே) கொடுக்க மாட்டேன் என்று சத்தியம் செய்ய வேண்டாம்.

(அவர்களால் உங்களுக்கு ஏதும் வருத்தங்கள் ஏற்பட்டிருந்தால்) அதனை மன்னித்துப் (பழைய வருத்தத்தைப்) பொருட்படுத்தாது விட்டு விடவும். அல்லாஹ் உங்களுக்கு மன்னிப்பதை நீங்கள் விரும்ப மாட்டீர்களா? அல்லாஹ் மிக்க மன்னிப்போனும், கிருபையுடையோனுமாக இருக்கிறான்." (24:22)

நிர்ப்பந்தம் இல்லை

""(நபியே) நீர் கூறும்! (முற்றிலும்) உண்மையான இ(வ்வேதமான)து உம் இறைவனால் அருளப்பட்டது. விரும்பியவர் (இதை) விசுவாசிக்கலாம். விரும்பாதவர் (இதை) நிராகரித்து விடலாம். (ஆனால் இதை நிராகரிக்கும்) அக்கிரமக்காரர்களுக்கு நிச்சயமாக நாம் நரகத்தைத்தான் சித்தப்படுத்தியுள்ளோம்" (18:29)

"(எனினும்) நிச்சயமாக எவர்கள் (இவ்வேதத்தை) விசுவாசங் கொண்டு நற்கருமங்கள் செய்கின்றார்களோ, அத்தகைய நன்மை செய்வோரின் கூலியை நிச்சயமாக நாம் வீணாக்கி விடுவதில்லை." (18:30)

நிலையான நற்கருமங்கள்.

"பொருளும், மக்களும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய அலங்காரங்களே (யன்றி நிலையானவைகளன்று) என்றுமே நிலையான நற்கருமங்கள்தான் உம் இறைவனிடத்தில் நற்கூலியைப் பெறுவதற்கும், நன்னம்பிக்கை கொள்வதற்கும் மிக்க மேலானவையாகும்" (18:46)

""(நபியே) நீர் கூறும் நிச்சயமாக நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதன்தான். நிச்சயமாக உங்களுடைய நாயன் ஒரே நாயன்தான். என எனக்கு வஹீ மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே எவன் தன் இறைவனைச் சந்திக்க விரும்புகின்றானோ அவன் நற்கருமங்களைச் செய்து தன் இறைவனுக்கு ஒருவரையும் இணையாக்காது (அவனையே) வணங்கி வருவானாக." (18:110)

"வானங்களையும், பூமியையும் இவற்றுக்கு மத்தியில் உள்ளவைகளையும் படைத்துப் போஷிப்பவனும் அவனே, ஆதலால் (அந்த அல்லாஹ்) ஒருவனையே நீங்கள் வணங்குங்கள். அவனுக்கு வழிபடுவதில் (உங்களுக்கு ஏற்படும் கஷ்டங்களையும்) நீங்கள் சகித்துக் கொள்ளுங்கள்." (19:65)

பெற்றோருடன் நடந்து கொள்ள வேண்டிய ஒழுங்கு

""(நபியே) உமதிறைவன் தன்னைத் தவிர (மற்றெவரையும்) வணங்கக் கூடாதென்றும் கட்டளையிட்டிருப்பதுடன், தாய் தந்தைக்கு நன்றி செய்யும்படியாகவும் கட்டளையிட்டிருக்கின்றான். அவர்களில் ஒருவரோ அல்லது இருவரோ முதுமையை அடைந்து விட்ட போதிலும் உம்மிடமிருந்து அவர்களை வெருட்டவும் வேண்டாம். அவர்களை (நிந்தனையாக)ச் "சீ" என்று சொல்லவும் வேண்டாம். அவர்களிடம் (எதைக் கூறிய போதிலும் புஜம் தாழ்த்தி) மிக்க மரியாதையாக (வும் அன்பாகவுமே பேசும்)" (17:23)

"அவர்களுக்கு மிக்க அன்புடன் பணிந்து நடப்பீராக! அன்றி, "என் இறைவனே நான் ஒரு குழந்தையாக இருந்த பொழுது (மிக்க அன்பாக) என்னை அவர்கள் வளர்த்து போஷித்த பிரகாரமே, நீயும் அவ்விருவர் மீதும் அன்பும் அருளும் புரியவாயாக" என்று பிரார்த்திப்பீராக" (17:24)




www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2025 JANUARY 01 - WEDNESDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# ஹஜ் குழு முன்னுள்ள பாரிய பொறுப்பு

அடுத்தவருடஹஜ்ஏற்பாடுகளைமுன்னெடுப்பதற்குசமயவிவகார புத்த சாசன கலாச்சார அமைச்சர் கலாநிதி சுனில் செனவி ஐவர் கொண்ட புதிய ஹஜ் கமிட்டி ஒன்றை கடந்த வாரம் நியமித்துள்ளார். பட்டயக் கணக்காளர் ரியாஸ் மிஹிலார் தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த குழுவில் சமூகத்தில் மதிப்பிற்குரிய துறை சார் நிபுணர்கள் பலரை உள்ளடக்கி இக்குழுவை அமைச்சர் நியமித்துள்ளார். முஸ்லிம் சமூகம் இந்த நியமனம் குறித்து திருப்தி தெரிவித்து வருகின்றது. துறை சார் நிபுணர்கள் பலரை உள்ளடக்கிய இந்த ஹஜ் குழுவின் தலைவராக பிரபல பட்டய கணக்காளரும் அனுபவம் மிக்கவருமான ரியாஸ் மிஹிலார் மற்றும் இக் குழுவில் கல்விமானும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான என் டி எம் அஸ்ஹர், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் சுற்றுலா முகாமைத்துவ பிரிவின் பேராசிரியர் எம் எஸ் எம் அஸ்லம், தொழிலதிபர் பௌஸ/ல் ஹக், முன்னாள் முஸ்லிம் சமய விவகார திணைக்களத்தின் பணிப்பாளரும், தற்போதைய விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் செயலாளருமான வை எல் எம் நவவி ஆகியோருடன் பதவி வழியாக முஸ்லிம் சமய விவகார திணைக்களத்தின் பணிப்பாளர் எம் எஸ் எம் நவாஸ்ும் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த ஹஜ் குழுவின் செயற்பாடுகள் குறித்து பலத்த விமர்சனங்கள் எழுப்பப்பட்டிருந்த நிலையில் கடந்த ஆண்டு முகவர் நிலையங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த ஹஜ் கோட்டாக்களை இரத்து செய்து, புதிதாக ஹஜ் கோட்டாக்களை பகிர்ந்தளிக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புதிய ஹஜ் குழுவினால் தனது ஏற்பாடுகள் தொடர்பாக குறையாக கருதப்படும் விடயங்களை உள்ளடக்கிய ஹஜ் சட்டமொன்றை அரசுக்கு சிபாரிசு செய்வது அவசியமாகும். ஹஜ் சட்டமொன்றின் தேவைப்பாடு பற்றி இலங்கையில் மிக நீண்ட காலமாக பேசப்பட்டு வந்தாலும் அது இன்னும் யதார்த்தமாக வரவில்லை. ஹஜ் ஏற்பாடுகள் தொடர்பாக குறைபாடுகள் ஏற்படக் காரணம் சரியான சட்ட வழிகாட்டல்கள் இல்லை என்பதே ஆகும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே புதிய ஹஜ் குழு அடுத்த ஆண்டின் ஹஜ்ஜுக்கான ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்கு சமாந்தரமாக ஹஜ் சட்டமொன்றை கொண்டு வருவதற்கு அரசுக்கு சிபாரிசு செய்ய வேண்டும். புதிய ஹஜ் குழு அதன் ஏனைய பணிகளுடன் ஹஜ் சட்டமொன்றை கொண்டு வருவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். மேலும் ஹஜ்ஜுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் ஹஜ் சட்டமொன்றை பற்றி பேசிய போதும், அதற்கான நகல் சட்டங்கள் தயாரான போதும் அவை இன்னும் செயலுரு பெறவில்லை. ஹஜ் தொடர்பாக எழும் அனேக பிரச்சனைகளுக்கு காரணம் ஹஜ் சட்டம் ஒன்று இல்லாமையே ஆகும். இதனால் அதற்கு நியமிக்கப்படுபவர்கள் தான் தோன்றித் தனமாக தீர்மானங்களை எடுத்து நடந்து கொண்டனர். எனினும் புதிய அரசானது அரசியலுக்கு அப்பால் சிந்தித்து ஹஜ் குழுவின் அங்கத்தவர்களை நியமித்துள்ளது. இதற்கு முன் ஒருபோதும் இப்படி துறை சார் நிபுணர்கள் நியமிக்கப்படவில்லை. பதிலாக அரசியல் சாயலில் உள்ள சிலரே நியமிக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். ஹஜ் குழுக்கள் என்ன முடிவெடுத்தாலும் இதற்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சரே தீர்மானங்களை எடுத்தார். மேலும் ஹஜ் குழுவின் தீர்மானங்களில் தலையிட்டு திடீர் திடீரென மாற்றங்களை அறிமுகம் செய்தமை குறிப்பிடத்தக்கது. இதனால்தான் கடந்த காலங்களில் ஹஜ் குழுவின் தீர்மானங்களுக்கு எதிராக முகவர் நிலையங்கள் மற்றும் பொதுமக்கள் நீதிமன்றங்களை நாடிய பல சந்தர்ப்பங்கள் அமைந்தன. அரசியல் தலையீடுகள் இல்லாமையால் இனி இந்த நிலை இருக்காது என நம்புகிறோம். ஹஜ் குழு சுதந்திரமாக இயங்கி தன் செயற்பாடுகளை முன்னெடுக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைப்பு






(இக்பால் அலி)

உலக முஸ்லிம் லீக் அமைப்பினால் கொழும்பில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 2000 குடும்பங்களுக்கு 12000 ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது.

உலக முஸ்லிம் லீக் நிறுவனத்தினால் கொழும்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வத்தளை மற்றும் மெகொட கொலன்னாவ பகுதியில் உள்ள சிங்கள, முஸ்லிம் , தமிழி, கிறிஸ்தவ ஆகிய பல்லின மக்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு வெல்லம்பிடியவில் இடம்பெற்றது.

ராபிதா நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி இம்ரான் ஜமால்தீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சவூதி அரேபியா நாட்டின் உயர் ஸ்தானிகர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி கலந்து கொண்டு வழங்கி வைத்தார்.

இதன் போது 12000 பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டதுடன் மல்வானை, கொட்ராமுல்ல ஆகிய பிரதேசங்களிலுள்ள 8500 குடும்பங்கள் இதன் மூலம் பயன்பெறவுள்ளனர்.

# இலவச கத்னா வைபவம்

கஹட்டோவிட்ட முஸ்லிம் லேடீஸ் ஸ்டடி சேர்கில் 21 தடவையாக ஏற்பாடு செய்துள்ள இலவச கத்னா வைபவம் எதிர்வரும் 11 ம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

ஏற்கெனவே 4ம் திகதி சனிக்கிழமை இடம்பெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

பாடசாலைகளில் தவணைப் பரீட்சை இடம்பெறவுள்ளதால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக முஸ்லிம் லேடீஸ் ஸ்டடி சேர்கில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 0714790063, 0767850749 என்ற தொலைபேசி இலக்கங்களோடு தொடர்பு கொள்ளவும்.



# மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட்டின் முயற்சியில் 7 கோடி ரூபா செலவில் அமைக்கப்படும் பாடசாலைக் கட்டிடம்

## நிர்மாணப்பணிகளை பார்வையிட நேரில் கள விஜயம்!






அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனின் முயற்சியில் புத்தளம், நாகவில்லு பிரதேசத்தின், எருக்கலம்பிட்டி முஸ்லிம் மஹா வித்தியாலத்தில், சுமார் 07 கோடி ரூபா நிதியொதுக்கீட்டில் அமைக்கப்பட்டு வரும், 3 மாடிக் கட்டிடத்தின் நிர்மாணப்பணிகளை தலைவர் ரிஷாட் கடந்த 29ஆம் திகதி நேரில் சென்று பார்வையிட்டார். மேற்படி விஜயத்தின் போது, வகுப்பறைக் கட்டிட வேலைகளை துரிதப்படுத்துவதற்கு தேவையான ஆலோசனைகளையும் வழங்கிய அவர், தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ், பாடசாலைக்குத் தேவையான இலத்திரனியல் உபகரணங்களையும் கல்லூரி நிர்வாகத்தினரிடம் கையளித்தார்.

இந்நிகழ்வின் போது, மக்கள் காங்கிரஸின் புத்தளம் மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான என்.ரீ.எம். தாஹிர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான நிபாஸ், ரிஜாஜ் மற்றும் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் நாசர், பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர், பாடசாலையின் அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் உட்பட கட்சியின் நாகாவில்லு கிளை முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

# பேருவளை பாஸியதுல் நஸ்ரியாவில் இரு மாடிக் கட்டிடம் திறப்பு விழா

(பீ.எம் முக்தார்)




பேருவளை மருதானை யாஸிர் அரபாத் மாவத்தையில் உள்ள அல்-பாஸியத்துல் நஸ்ரியா ஆண்கள் பாடசாலையில் மர்ஹூம் அல்-ஹாஜ் நாஸிம் பாச்சா மரிக்கார், மர்ஹூமா ஹாஜியானி ஸித்தி ஹதீஜா ஆகியோரின் ஞாபகார்த்தமாக அவர்களது பிள்ளைகளினால் பல கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய வகுப்பறை கட்டிடம் திறந்து வைக்கும் நிகழ்வு எதிர்வரும் 2ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப 10:00 மணியளவில் இடம்பெறவுள்ளது. இதன் அதிபர் திருமதி யெஹியா ஹூதைர் தலைமையில் நடைபெறும் இத்திறப்பு விழாவில் மர்ஹூம் நாஸிம் பாச்சா மரிக்கார் தம்பதிகளின் பிள்ளைகள் கலந்து கொண்டு புதிய கட்டிடத்தை திறந்து வைக்கவுள்ளனர்.

நான்கு மாடிகளைக் கொண்ட இக் கட்டிடத்தில் இரு மாடிகள் பூர்த்தி செய்யப்பட்டு முதல் கட்டமாக திறந்து வைக்கப்படுகின்றது.

அல்- பாஸியத்துல் நஸ்ரியா ஆண்கள் பாடசாலையில் நிலவும் இட நெருக்கடியை தீர்த்து வைக்கும் மற்றுமோர் முயற்சியாக புதிய கட்டிடமொன்றை நிர்மாணிக்க முன்வந்தமை குறித்து பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள், ஊர் மக்கள் ஆகியோர் மர்ஹூம் நாஸிம் பாச்சா மரிக்காரின் பிள்ளைகளுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

# தமிழ் மொழி மூல அறிவுப் போட்டியில் ஏ.ஆர்.எப்.அம்னா இரண்டாம் இடம்

(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)




வடமத்திய மாகாண கலாச்சார திணைக்களத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் கலைநிகழ்ச்சி இம்முறையும் 34 ஆவது தடவையாக கொரக்கஹவெவ மாகாண அபிவிருத்தி மற்றும் பயிற்சி அலகின் கேட்போர் கூடத்தில் மிக விமர்சையாக நடைபெற்றது. இந்நிகழ்வை முன்னிட்டு நடாத்தப்பட்ட தமிழ் மொழி மூல அறிவுப் போட்டியில் அனுராதபுரம் சாஹிரா கல்லூரியில் தரம் 9வீ பிரிவில் கல்வி பயிலும் ஏ.ஆர்.எப்.அம்னா இரண்டாம் இடத்தை பெற்றுள்ளதாக அதிபர் ஜே.ஏ. அசாத் மொஹமட் தெரிவித்தார்.

# நற்பிட்டிமுனைக்கு பாராளுமன்ற உறுப்பினர் தாஹிர் விஜயம்



(எம் எப். றிபாஸ்)



திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் நற்பிட்டிமுனை பிரதேசத்திற்கு விஜயம் கள விஜயம் மேற்கொண்டிருந்தார். கடந்த பொதுத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நோக்கில் அவர் அங்கு விஜயம் செய்து மக்களின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்துள்ளார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கல்முனைத் தொகுதி இளைஞர் அமைப்பாளர் சட்டத்தரணி சீ.எம். கலீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நற்பிட்டிமுனை பிரதேசத்தில் செய்யப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைகள், கல்வி ரீதியான செயற்பாடுகள், மத ஸ்தானங்களுக்கான உதவிகள், வாழ்வாதாரத் திட்டங்கள் போன்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதோடு எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளை துரிதமாக முன்னெடுப்பதாகவும் வாக்கு அளித்துள்ளார்.

# வெலிப்பன்னையில் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டோருக்கு வை.எம்.எம்.ஏ.யின் உதவிக்கரம்




(அஷ்ரப் ஏ சமத்)



அகில இலங்கை வை.எம்.எம். ஏ இயக்கத்தின அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஏற்பாட்டில் மத்துகம வெலிப்பன்னை கிராமத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட விதவைகள் மற்றும் பாடசாலை சிறுவர்கள் என 60க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வை.எம்.எம். ஏ வெலிப்பன்னை கிளையினால் உலர் உணவுப் பொருட்கள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் அதன் தேசியத் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி அம்ஹர் சரீப் தலைமையில் வெலிப்பன்னை ரஹ்மானிய முஸ்லிம் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வுக்கு வை.எம்.எம். இயக்கத்தின் அனர்த்த முகாமைத்துவ திட்டப் பணிப்பாளர் அன்வர் சதாத், களுத்துறை மாவட்ட வை.எம். எம். ஏ. பணிப்பாளர் எம். இஸ்மத், வெலிப்பன்னை ரஹ்மான் முஸ்லிம் வித்தியாலய அதிபர் ஏ.ஆர்.எம் ரஹ்மான், வெலிப்பன்னை கிளைத் தலைவர் மொஹமட் அஹ்சன், செயலாளர் மொஹமட் றிப்கான், பொருளாளர் மொஹமட் அஹ்லன் மற்றும் ஊர் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கொடூரமான அரக்க தனத்தை கண்டு உலகம் ஏன் வெட்கி தலை குனிய மறுக்கிறது!



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

இஸ்ரேல் என்னும் கொடூரமான அரக்கன் காசாவில் 46,000 பேரை படுகொலை செய்து விட்டு அதன் அடுத்த கொடூரமான முகத்தை டாமாஸ்கஸ் நகரை நோக்கி சென்று கொண்டு இருப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது.

இந்த செயல்பாடு முஸ்லிம் உலகின் மிகப்பெரிய அளவில் ஆன அசசுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஈரானின் கட்டுபாட்டில் செயல்படும் ஹிஸ்புல்லாஹ் ஹொதீக்கள் மற்றும் இஸ்லாமிய கூட்டு படைகள் அனைத்தையும் பின்னடைவை சந்திக்கச் செல்லும் வகையில் இஸ்ரேல் மற்றும் அமெரிக்க கூட்டு படைகள் இந்த நடவடிக்கையை தொடருவதாக பலரும் தங்கள் பார்வையை எடுத்து வைத்துள்ள நிலையில் இஸ்ரேல் அரசு இதனைப் பற்றி எல்லா எந்த வகையிலும் கவலைப்படுவதில்லை என்பதை தாண்டி தனது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதைக் காணலாம்.

ஈரான் இது குறித்து தனது கவலையை பகிர்ந்து கொள்ளும் வகையில் இஸ்லாமிய நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ற நிலையிலும் இது குறித்தான கவலை யாரிடமும் இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

காசாவில் பொதுமக்களை முழுமையாகக் கொலை செய்து இடும் வகையில் அமெரிக்கா பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருவதாகவும் அது இறுதி கட்டத்தை அடைந்து வருவதாக கூறப்படுகிறது.இந்த அமைதி பேச்சை இறுதி கட்டத்தை அடைந்து வருவதாக இஸ்ரேலிய ராணுவ துறை அமைச்சர் இஸ்ரேல் கட்ஸ் ஒப்புக் கொண்டுள்ளதை கவனத்தில் எடுத்துக் கொள்ள முடிகிறது.

இந்த பேச்சுவார்த்தையில் அமெரிக்கா நட்பு நாடுகளாக இருந்து வரும் எகிப்து மற்றும் கத்தார் தீவிரமாக பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் பொருட்டு அமெரிக்கா இன்டெலிஜன் சி ஐ ஏ இயக்குனர் வில்லியம்ஸ் சி அங்கு விரைந்துள்ளதை நாம் காண திட்டமாக இருந்து வருகிறது. அதாவது சிரிய தலைநகர் டமாஸ்கஸ ில் கட்டுப்பாடுகள் மாறியுள்ளதால் போர்நிறுத்த நடவடிக்கைகள் சீர் குலைந்துவிட்டன என்று கூறி இஸ்ரேலிய ராணுவம் கூறி வருகிறது.அதே நேரத்தில் தனது நாட்டின் பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவிக்கும் எந்தவொரு அமைப்பையும் தம்மால் சகித்து கொள்ள முடியாது என்று பெஞ்சமின் நிதான்யாகு கூறி வருகிறார்."

அதே சமயம் சிரியா தொடர்பான இஸ்ரேலிய கொள்கையை நாங்கள் கள நிலவரத்திற்கு ஏற்ப தீர்மானிப்போம்", என்று பெஞ்சமின் நிதான்யாகு கூறினார்..சர்வதேச சட்டங்களின் படி, அவர்கள் சட்டத்திற்கு புறம்பாக குடியேறியவர்களாக கிளர்ச்சி மற்றும் போரால் துவண்டு போன சிரியா புதிய பிரச்னைகளை அனுமதிக்காது என்று அவர் கூறினார். அபூ முஹம்மது அல் ஜீலானி யின் கருத்தை செவிமடுத்த இஸ்ரேல் பாதுகாப்பு படையின் இராணுவ தலைமை இது குறித்து எந்த கருத்தையும் இதுவரை தெரிவிக்கவில்லை. ஆனால் இதற்கு முன்பு, ""ஆயுதங்கள் பயங்கரவாதிகளின் கைகளுக்கு சென்றுவிடுவதை தடுக்க இந்த தாக்குதல்கள் தேவையானது"" என்று அவர்கள் தொடர்ந்து கூறி வருகின்றனர்.டமாஸ்கஸ் மீது ஹயத் தஹ்ரிர் அல்-ஷாம் கிளர்ச்சிக்குழுவின் சில பிரிவினர் தாக்குதல் நடத்த துவங்கிய பிறகு, சிரியா அதிபர் பஷர் அல் அசத் மற்றும் அவருடைய குடும்ப உறுப்பினர்கள் ரஷ்யாவில் தஞ்சம் புகுந்தனர். இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும் முயற்சியில், சிரியா கிளர்ச்சிக் குழுக்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன.



கடந்த வாரம் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் ஆண்டனி ப்ளிங்டன் ஹயத் தஹ்ரிர் அல்-ஷாம் கிளர்ச்சி குழுவோடு அமெரிக்கா பேசியதாக குறிப்பிட்டார்.

ஹயத் தஹ்ரிர் அல்-ஷாம் (HTS) கிளர்ச்சிக் குழுவை அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் பலவும் பயங்கரவாத அமைப்பாக குறிப்பிடுகின்றன. அதாவது HTS தலைவர் அல் கொய்த அமைப்பில் இணைந்து தீவிரமாகச் செயல்பட்டு கொண்டு இருந்த நிலையில் தான் அமெரிக்கா அரசு இவரது தலைக்கு 10 மில்லியன் அமெரிக்க டாலர்களை அறிவிப்பு செய்தது.

தற்போதைய நிலையில் அமெரிக்கா அரசு அபூ முஹம்மது அல் ஜோலானியுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதைக் காண கூடியதாக இருக்கிறது. ஆனால் அமெரிக்காவின் இந்த நடவடிக்கை சர்வதேச சமூகத்திற்கு விந்தையான ஒன்றாகவே உள்ளது என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை என்பதை நாம் இங்கே சுட்டி காட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் சிரியா தூதர் கெய்ர் பெடெர்சென் ஞாயிற்றுக் கிழமை அன்று, சிரியாவில் பொருளாதார நிலைமைகள் சீரடைய, ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் தடைகள் நீக்கப்படும் என்றும் பொருளாதார தடைகளுக்கு ஒரு முடிவு வரும் என்று நாங்கள் நம்புகிறோம். அதன் பிறகு தான் சிரியாவை மீண்டும் கட்டமைக்க முடியும்," என்று டமாஸ்கஸ் வந்த அவர் கூறினார்.

இதற்கிடையில் துருக்கியின் பாதுகாப்பு அமைச்சர் யசர் குலெர், சிரியாவின் புதிய அரசுக்கு தேவையான ராணுவ உதவிகளை செய்ய துருக்கி தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

"புதிய நிர்வாகம் என்ன செய்யும் என்பதைப் பார்க்க வேண்டியது அவசியம். அவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுப்பது முக்கியம் என்று நாங்கள் நினைக்கிறோம்," என்று துருக்கியின் கருத்தாக இருக்கிறது..

இதனிடையே காசா மற்றும் சிரியாவில் அத்துமீறி நுழைந்து பொதுமக்களை தொடர்ந்து படுகொலை செய்து வரும் இஸ்ரேலிய ராணுவம் அதன் செயல்பாடுகள் எல்லை மீறி செல்லும் வகையில் அமைந்துள்ளது. சர்வதேச நாடுகள் இதனை கண்டும் காணாமல் சென்று கொண்டு இருப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது. உலகம் நாகரீகமான சமூகம் தானா என்கிற கேள்விக்கு இதுவரை எந்தவொரு நிலையிலும் பதில் இல்லை என்பதே நிதர்சனமான உண்மை..

பாலஸ்தீன பிரதேசம் அந்த மக்களின் சொந்தமான நிலம் என்பதை நாம் யாரும் எந்தவொரு நிலையிலும் மறுக்க முடியாது. 1918 ம் ஆண்டுகளில் உஸ்மானிய பேரரசு வீழ்ந்த பிறகு இந்த சதி தீட்டம் தீட்டப்பட்டது. 1948 ம் ஆண்டுகளில் இஸ்ரேலிய நாடு சுதந்திரம் அடைந்ததாக அறிவிப்பு செய்யப்பட்ட நிலையில் பெரும்பாலான நிலங்களை அமெரிக்கா மற்றும் பிரித்தானிய கூட்டணி அரபுகளிடம் இருந்து பிடுங்கி நியாயமற்ற முறையில் அழித்து விட்டு அதாவது ராஜ்ஜியத்தை முழுமையாக தனதாக்கிக் கொள்ள தனது திட்டத்தை அவர்கள் முன்னெடுத்துச் செல்வதில் எந்தவொரு தடையும் இருப்பதாக தெரியவில்லை.

இந்த நிலையில் இஸ்ரேலிய ராணுவத்தின் 242 படை பிரிவின் பெயர் வெளியிட விரும்பாத யூதர் ஒருவர் அதிர்ச்சி தரும் வகையில் ஒரு தகவலை தெரிவித்துள்ளது சர்வதேச நாடுகளை அதிர்ச்சி அடையும் வகையில் அமைந்துள்ளது என்பதே அந்த செய்தியாக உள்ளது. அதாவது இஸ்ரேலிய ராணுவத்தின் தலைமை தனது வீரர்கள் காசாவில் நுழையும் யாரையும் சுட்டு படுகொலை செய்ய வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளது தற்போதைய நிலையில் வெளிஉலகிற்கு வந்துள்ளது. ஆகவே இந்த படுகொலை சம்பவத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகள் கூட தயவு தாட்சனை இல்லாமல் படுகொலை செய்து வரும் நிலையில் உலகின் பல்வேறு நாடுகள் இதனை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருப்பதை நாம் புரிந்து கொள்ள கூடியதாக உள்ளது. இஸ்ரேலிய யூத சியோனிச ராணுவ தலைமை உத்தரவின் படி காசாவில் பொதுமக்களை சுட்டு கொலை செய்து அவர்களது உடல்களை நாய்களுக்கு இரையாக்கி வருவதும் தற்போது உலகையே அதிர்ச்சி அடைய செய்துள்ளது.

இந்த நிலையில் வரும் கிறிஸ்துமஸ் பண்டிகை முன்பே அதாவது டிசம்பர் 25 திகதிக்கு முன்பே அமைதி ஒப்பந்தம் கையெழுத்து முடிகிறது. அதாவது ஹமாஸ் இயக்கத்தின் சார்பில் கலீல் ஹயா இதில் கலந்து கொண்டு வருவதாக தெரிய வந்துள்ளது. அமெரிக்க உளவுத்துறை தலைவர் மற்றும் இஸ்ரேலிய ராணுவ துறை சார்ந்த ஆளுமைகள் தீவிர கவனம் செலுத்தி வருவதைக் நாம் காணலாம்.

இதற்கிடையில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பில் உள்ள கோலன் குன்றுகளில் குடியேற்றங்களை விரிவுப்படுத்தும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது இஸ்ரேல் அரசு.இஸ்லாமிய கிளர்ச்சிக் குழுவான உவுளு சிரியாவில் பஷர் அல் அசத்தின் ஆட்சியை வீழ்த்திய பிறகு, இஸ்ரேலுடனான சிரியாவின் எல்லையில் ஒரு "புதிய அமைப்பு " உருவாகியுள்ளதால் இந்த நடவடிக்கை முக்கியமான ஒன்று என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு குறிப்பிட்டார். அதாவது தான் எந்தவொரு எல்லைக்கும் செல்வேன் என்பதே அவரின் பேச்சின் சாராம்சமாக அமைந்துள்ளது.

இஸ்ரேலிய ராணுவம் 1967-ஆம் ஆண்டு அரபு நாடுகளுக்கு எதிராக நடைபெற்ற 6 நாட்கள் போருக்கு பிறகு கோலன் குன்றுகளை கைப்பற்றியது . இஸ்ரேல் கோலன் குன்றுகளை சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ளது என சர்வதேச சட்டப்படி கருதப்படுகிறது. அங்கு தற்போது உள்ள மக்கள் தொகையை இரட்டிப்பாக்க வேண்டும் என்று நெதன்யாகு கூறியுள்ளார். அதாவது கோலன் குன்றுகளில் யூத குடியேற்றத்தை அதிகரிப்பதே இஸ்ரேலின் அறியப்படுகின்றனர். ஆனால் இஸ்ரேல் அதற்கு மறுப்பு தெரிவித்துள்ளது.இந்த பகுதியில் 20 ஆயிரம் சிரியா மக்கள் வசித்து வருகின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் ட்ரூஸ் அரேபியர்கள் ஆவார்கள். இஸ்ரேலின் கட்டுப்பாட்டிற்கு அந்த பகுதி வந்த பிறகு அங்கிருந்து செல்லாதவர்கள் ட்ரூஸ் அரேபியர்கள். நெதன்யாகு அந்த பகுதியை இஸ்ரேல் தன்னுடைய கட்டுப்பாட்டில் தொடர்ந்து வைத்திருக்கும் என்றும் அந்த பகுதியை வளமாக மாற்றி அங்கே குடியேற்றங்களை உருவாக்கும் என்றும் யூத சியோனிச ராணுவ தலைமை கூறி வருகிறது.

சிரியாவின் புதிய தலைவராக கருதப்படும் அபு முகமது அல் ஜொலானி (அஹமது அல்-ஷரா), இஸ்ரேல் சிரியா நாட்டின் ராணுவ தளங்கள் மீது தாக்குதல் நடத்துவது தொடர்பாக விமர்சனம் செய்தார். இதற்கு ஒரு நாள் கழித்து நெதன்யாகுவின் அறிவிப்பு வெளியாகியுள்ளது.இஸ்ரேலிய ராணுவ தாக்குதல்கள் சிவப்பு கோட்டை மீறிவிட்டது என்று அபு முஹம்மது அல் ஜோலானி தெரிவித்தார். மேலும் இஸ்ரேல் நடவடிக்கைகள் பிராந்தியத்தில் நிலவும் பதற்றத்தை அதிகரிக்கிறது என்றும் கூறினார்.மேலும் சிரியா எந்த அண்டை நாட்டினருடனும் மோதலில் ஈடுபட விரும்பவில்லை என்று தெரிவித்தார்.

சிரியா தொலைக்காட்சி பேசிய உவுளு தலைவர் அபூ முஹம்மது அல் ஜீலானி தொடர்ச்சியான அதனை யூதர்களுக்கு வழங்கியதை வரலாறு எப்படி மறுக்க முடியும் என்பதை குறித்து யாரும் பேச முன்வராத நிலையில் தங்களிடம் இருந்து பறிக்கப்பட்ட நிலத்தை மீட்பு செய்ய போராடும் போராளிகளை அவர்களின் சொந்த மக்களை படுகொலை செய்தும் ஏராளமான அப்பாவி பொதுமக்களை கைது செய்து சிறையில் பல ஆண்டுகளாக அடைந்து வைத்தும், பல்லாயிரக்கணக்கான பொதுமக்களை படுகொலை செய்தும், 1,10000 பொதுமக்கள் ஊனமுற்ற நிலையில் படுகாயம் அடைந்த நிலையில் இந்த மக்களுக்கு நியாயம் தான் என்ன??

நிச்சயமாக இந்த அநீதிக்கு தீர்வை இந்த உலகத்தில் வாழும் மக்களிடம் இருந்து நாம் எதிர்பார்த்தால் அது எந்தவொரு நிலையிலும் சாத்தியக்கூறு இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும். அப்படியென்றால் இந்த அநீதிக்கு தீர்வு தான் என்ன என்கிற கேள்விக்கு எந்தவொரு பதிலும் இது வரை இல்லை என்பதே உண்மையாகும். காலம் எல்லா வகையான அநீதிக்கும் தீர்வை தெளிவாக தந்து விடும் என்பதை யாரும் மறுக்க இயலாது. அதற்கான வழி என்பது பொறுமை மட்டுமே. இதனைத் தவிர்த்து பாலஸ்தீன மக்களின் உரிமைகளை நிலைநாட்டும் பொருட்டு எந்தவொரு தீர்வும் இதுவரை இல்லை என்பதே நாம் எந்தவொரு நிலையிலும் மறுக்க முடியாது என்பதை நிதர்சனமான உண்மையாகும்!

# அரசின் மிகப் பெரிய அரிசி களஞ்சியசாலைக்கு அமைச்சர் வஸந்த சமரசிங்க விஜயம்



(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)

40 ஆயிரம் மெற்றிக் தொன்களுக்கும் அதிகமான அரிசியை சேமிக்கும் திறன் கொண்டதும் 22 உருளைக் கிடங்குகளைக் கொண்டதுமான அரசாங்கத்தின் மிகப்பெரிய அரிசி ஆலை களஞ்சிய வளாகத்திற்கு வர்த்தக, உணவு, பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அமைச்சர் வசந்த சமரசிங்க (28) களவிஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். அரிசிக்கு தேவையான உலர் நிலையை பராமரிக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட இந்த நெல் ஆலை சேமிப்பு வளாகம் 1977 ம் ஆண்டு முதல் கைவிடப்பட்டுள்ளது. அதனை மீண்டும் பயன்படுத்தும் வகையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு நாட்டில் மீண்டும் அரிசி தட்டுப்பாடு ஏற்படாத வகையில் தொழில்நுட்ப அனுபவம் வாய்ந்த பொறியாளர்கள் குழுவை கொண்டு பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இன்னும் சில தினங்களுக்குள் இந்த அரிசி சேமிப்பு வளாகத்தை புனரமைப்பதற்கு தேவையான மதிப்பீட்டு பணிகள் மேற்கொள் ளப்படவுள்ளதுடன், நாட்டு மக்களின் தேவைக்காக கல்கமுவில் மிகப்பெரிய அரிசி சேமிப்பு வளாகமாக இதனை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.






மஹாஇலுப்பல்லம் விவசாய ஆராய்ச்சி மத்திய நிலையத்திற்கு விவசாய கால்நடை காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் லால் காந்த (28) களவிஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கு உற்பத்தி செய்யப்படும் விதைகளை கண்காணித்ததனை படத்தில் காணலாம்.

(படம் :- எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)

# ஆங்கில பாலர் பாடசாலையின் விடுகை விழாவும் கலை நிகழ்வும்






(எம். எப். றிபாஸ்)

அட்டாளச்சேனை விஷ்டம் அகடமி ஆங்கில பாலர் பாடசாலையின் விடுகை விழாவும், கலை நிகழ்ச்சியும் லொயிட்ஸ் விழா மண்டபத்தில் சனிக்கிழமை(28) நடைபெற்றது.

பாடசாலையின் முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.எம்.இர்பான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஏ.எம். நௌபர்டீன், அட்டாளைச்சேனை பிரதேச செயலத்தின் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல், பிரதம அதிதிகளாகவும் உதவி கல்வி பணிப்பாளர் ஏ.எல்.பாயிஸ், சொக்கமோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜே.றியாஸ் அதிபர்களான ஓ.எல். எம்.றிஸ்வான், எஸ்.எம்.றஹீம், ஏ. கே. நழீம், எம். எச். அப்துல் ற/ஹமான் கௌரவ அதிதிகளாகவும், பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்களான எம்.ஐ.றியாஸ், ஐ.எல்.எம்.ரபீக் ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

போட்டி நிகழ்வுகளில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு அதிதிகளினால் பரிசு பொருட்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டதுடன் அதிதிகளின் உரைகளும் இடம் பெற்றன.

# வெலிகம ரிம்ஸா முஹம்மதின் 'பிஞ்சு மனம்' சிறுகதை நூல் வெளியீட்டு விழா






(ரிம்ஸா முஹம்மத்)

வெலிகம ரிம்ஸா முஹம்மத் எழுதிய 'பிஞ்சு மனம்' சிறுகதை நூல் வெளியீட்டு விழா 2025 ஜனவரி 05 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4.00 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் கலாபூஷணம், கவிஞர் திக்குவல்லை ஸப்வானின் தலைமையில் நடைபெறவுள்ளது.

பூங்காவனம் இலக்கிய வட்டம் ஏற்பாடு செய்திருக்கும் இந்நிகழ் வானது தேசத்தின் கண் - தமிழ் மணி மானா மக்கீன், கலைஞர் - கவிஞர் எம்.எஸ். அப்துல் லத்தீப் ஆகியோரின் முன்னிலையில் நடைபெறவுள்ளது. தொழிலதிபர் சமூக தீபம், அல்ஹாஜ் எம்.சீ. பஹார்தீன் நூலின் முதற் பிரதியையும், கலைஞர் அக்குறணை சஹாப்தீன் கௌரவப் பிரதியையும் பெற்றுக்கொள்ளவுள்ளார்கள்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர், முன்னாள் அமைச்சர் ரிசாட் பதியுதீன் விசேட அதிதியாகவும், தொழிலதிபரும் சமூக சேவையாளருமான அல்ஹாஜ் எம்.ஏ.ஸீ. மஹ்ஸூம் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள்.

சிறப்புப் பிரதிகள் பெறும் ஊடக அதிதிகளாக மூத்த பத்திரிகையாளர் என்.எம். அமீன் உட்பட பல முக்கிய ஊடகவியலாளர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

# கற்பிட்டியில் எதிர்காலத்திற்கான வலுவூட்டல் தொடர்பான செயலமர்வு



(எம்.எச்.எம்.சியாஜ், எம்.யூ.எம்.சனூன்)

கற்பிட்டி பிரதேச இளைஞர் சம்மேளனம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினுடன் இணைந்து கற்பிட்டி பிரதேச செயலகத்தின் பெண்கள் அபிவிருத்தி பிரிவினால் செயலமர்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கற்பிட்டி பிரதேசத்தில் இனங் காணப்பட்ட மிக முக்கிய பிரச்சினைகளில் ஒன்றான இளவயது திருமணம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிரச்சினைகளை குறைப்பதற்காக எதிர்காலத்திற்கான வலுவூட்டல் என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டு சிறந்த வாழ்க்கைக் கான நுட்பங்களை கற்றல் தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்டது.

இச்செயலமர்வானது வேல்ட் விசன் லங்கா நிறுவனத்தின் கிரேஸ் செயற்திட்டதின் அனுசரனை யூடாக கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் உதவி பிரதேச செயலாளர் சந்தியா பிரியதர்சினி தலைமையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்நிகழ்வின் வளவாளராக கற்பிட்டி பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தரும் செடோ ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான ஏ. ஆர் முனாஸ் கலந்து கெண்டதுடன் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சாந்திலதா, கற்பிட்டி பிரதேச இளைஞர் சம்மேளன உறுப்பினர்கள் மற்றும் வேல்ட் விசன் லங்கா நிறுவன உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# தேசிய ரீதியாக சாதிக்க காரணமாக இருந்த கல்முனை வலய 500 ஆசிரியர்கள் கௌரவிப்பு !



(நூருல் ஹுதா உமர்)


கடந்த 2023 ஆம் ஆண்டில் சாதாரண தர பரீட்சையில் அதிகூடிய பெறுபேறுகளைப் பெற்று கல்முனை கல்வி வலயம் தேசிய மட்டத்தில் அகில இலங்கை ரீதியில் 2வது இடத்தை பெற்றமைக்காக அந்த உயர்வுக்கு காரணமாக அமைந்த ஆசிரியப் பெருந்தகைகளைப் பாராட்டி நற்சான்றுப் பத்திரங்களை வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம் தலைமையில் சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் இடம்பெற்றது.

மாணவர்களின் பல்லின கலை, கலாச்சார நிகழ்வுகளுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பீ. காப்தீபன் கலந்து கொண்டார்கள்.

கல்முனை கல்வி வலயம் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொள்ள காரணமாக அமைந்த 500 க்கும் அதிகமான ஆசிரியர்கள், அதிபர்கள், பாட இணைப்பாளர், ஆசிரிய ஆலோசகர்கள் எனப்பலரும் நற்சான்று பத்திரம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் கல்முனை வலயக்கல்வி அலுவலக பிரதி கல்வி பணிப்பாளர் கள், உதவிக்கல்வி பணிப்பாளர்கள், கோட்டக்கல்வி பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாட இணைப்பாளர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், வலயக்கல்வி பணிமனை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# சவால்கள் நிறைந்த 2025



எம்.எஸ். அமீர் ஹுசைன்



ஆங்கில வருடக் கணக்கின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டு விடைபெற்று 2025 ஆம் ஆண்டு புதுவருடம் மலர்ந்திருக்கின்றது. புது வருடம் ஒன்று மலரும் போது மக்கள் அனைவரும் ஏதோ ஒரு வகையில் புதிய எதிர்பார்ப்புக்களை தம் மனதில் ஏற்படுத்திக் கொள்வது மரபாக இருந்து வருகின்றது.

கடந்து போன முன்னைய வருடத்தில் அடைய முடியாமல் போன அபிலாசைகளை மலரும் புது வருடத்திலாவது அடைந்துகொள்ள வேண்டும் என்று முயற்சிகளை மேற்கொள்வதும் அதற்கான திட்டங்களை வகுப்பதும் இயல்பாக நடைபெறுகின்றது. அதே போன்று தான் பதவியில் இருக்கின்ற அரசும் நாட்டிற்கும் மக்களுக்கும் ஆற்ற வேண்டிய சேவைகள், பணிகள் தொடர்பாக திட்டமிடல்களை மேற்கொள்வதோடு அதற்கான அமுலாக்கல் செயலணிகளை அமைத்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றமை பொதுவான செயற்பாடுகளாகும். அந்த வகையில் பதவியில் இருப்பது இன்னும் முதிர்ச்சியடையாத புதிய ஆட்சியாகும். பதவிக்கு வந்து இரண்டே மாதங்கள் தான் ஆகின்றன.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு கடந்த வருடத்தில் எதை சாதித்தது என்பதை விட மலரும் 2025 ஆம் ஆண்டு புது வருடத்தில் இந்நாட்டை பொருளாதார சுபீட்சமும் அபிவிருத்தியும் கொண்ட நாடாக மலரச் செய்தல், மக்களது வாழ்க்கைச் சுமையை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், அரசியல் ரீதியாக காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகளை முன்வைத்து ஸ்தீரமான ஆட்சியை நிலை நிறுத்துதல் போன்றவை அரசாங்கத்தின் முன்னுள்ள பிரதான எதிர்பார்ப்புக்களாகும்.

ஏற்கனவே இந்த அரசு பதவிக்கு வர முன்னர் மக்களுக்கு வழங்கியுள்ள வாக்குறுதிகளில் இவை பிரதான அம்சங்களாகும். ஏற்கனவே நாடு 70 வருடங்களாக நாசமாக்கப்பட்டு பொருளாதார ரீதியாக பின்னடைவுகளையும் இழப்புக்களையும் சந்தித்துள்ள நாடு என்பது இந்த ஆட்சியில் அதிகாரத்தை பெற்றுள்ள அனைத்து தரப்பினர்களதும் குற்றச்சாட்டாகும். அதனால் கடந்த 70 வருடங்களாக இந்த நாட்டில் மேலாதிக்கம் செலுத்திய ஊழல், மோசடிகளை முடிவுக்கு கொண்டு வர நடவடிக்கைகளை எடுத்தல், கடந்த ஆட்சிக் காலப்பகுதியில் சொல்லப்பட்ட ஊழல்கள், சூறையாடல்களில் ஈடுபட்டு அரச நிதி, சொத்துக்களை கையாடல் செய்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் என்பன அரசின் முன்னுள்ள பிரதான சவால்களாகும்.

இந்த ஆட்சி மலர்ந்த நாளில் இருந்து முகம் கொடுத்து வரும் பிரதான சவாலாக அமைவது, மக்கள் எதிர் நோக்குகின்ற வாழ்க்கை செலவு உயர்வை குறைப்பதற்கான நிவாரண நடவடிக்கைகளை எடுப்பதாகும். மேலும் இது அரசாங்கத்தின் தலையாய கடப்பாடாகும். ஆனாலும் இந்த வருடத்தில் 2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள், அரசியல் அமைப்பிற்கான திருத்தம் என்பன அரசாங்கத்தால் முகம் கொடுக்க இருக்கின்ற ஏனைய சவால்களாகும். நாட்டின் நிதி நிலைமை மிகவும் மோசமான நிலையில் இருந்து வருகின்ற நிலையில் உள்நாட்டு வருமானங்கள் அடிமட்டத்தில் இருக்கின்ற நிலையில் சர்வதேச நாணய நிதியத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மூன்றாம் கட்ட கடனை மாத்திரம் நம்பி திட்டங்களை மும்மொழிய முடியாத நிலையில் பொருளாதார நெருக்கடி தொடர்கின்றதால் இந்த நெருக்கடியை சமாளிக்க தீர்வு காண வேண்டி இருக்கின்றது.

அவ்வாறே ஏற்கனவே பொதுத் தேர்தல் காலப்பகுதியில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் பிரதானமாக அமைந்தவை பின்போடப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை ஏப்ரலில் நடத்துவது என்ற விடயமாகும். அத்துடன் கடந்த 06 வருடங்களுக்கு மேலாக பின்போடப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலையும் நடத்துவதென்று வாக்குறுதி வழங்கப்பட்டு அதனை மக்கள் எதிர்பார்த்திருக்கின்றனர். 2025 ஏப்ரலில் நடைபெற இருக்கின்ற வரவு செலவுத் திட்டத்தின் பின்னர் இந்த தேர்தல்களுக்கான நாள் குறிக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்ய தவறினால் அரசாங்கம் அரசியல் ரீதியான நெருக்கடிகளை சந்திக்க நேரிடலாம். இதற்கிடையில் தற்போது அத்தியாவசிய உணவுப் பொருட்களில் ஒன்றான அரிசிக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்த தட்டுப்பாட்டை சமாளிக்க இறக்குமதிக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியும் உள்நாட்டில் அரிசித் தட்டுப்பாட்டை தீர்க்க சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

அத்துடன் நடந்து முடிந்த பொதுத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் அரசிற்கு முன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கிடைத்து பாராளுமன்றத்தில் 158 ஆசனங்கள் உள்ளன. இந்த பொன்னான சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நடை முறையில் இருந்து வருகின்ற அரசியல் அமைப்பை மாற்றியமைத்து மூன்றாவது குடியரசு யாப்பை வரைய வேண்டும் என்பது அரசின் எதிர்பார்ப்பாகும். புதிய அரசியல் யாப்பு வரும் போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டு வெஸ்மினிஸ்டர் முறையிலான பாராளுமன்றத்திற்கு பொறுப்பு சொல்லக் கூடிய பிரதமர் பதவியைக் கொண்ட பாராளுமன்ற நிர்வாக முறை ஏற்படுத்தப்பட திட்டமிடப்பட்டிருக்கின்றது. அதுவும் ஓரளவிற்காவது நிறைவேற்று அதிகாரத்தை கொண்ட பிரதமர் பதவி ஆகும்.

அதனால் மலர்ந்துள்ள 2025 ஆம் ஆண்டு இந்த அரசிற்கு பல வழிகளில் சோதனைகளும் சவால்களும் நிறைந்த ஆண்டாக அமைய இருக்கின்றது என்பதில் சந்தேகம் இல்லை. எப்படியோ ஒரு பலமான வெளிநாட்டு கொள்கை மற்றும் சர்வதேச உறவை கட்டியெழுப்புவதற்கான தந்திரோபாயங்கள் இந்த சவால்களை இலகுவாக வெற்றி கொள்ள ஒருவிதத்தில் கைகொடுக்கலாம். அதே போன்று உள்நாட்டில் முன்னெடுக்கப்படுகின்ற ஆக்கபூர்வமான செயல் திறன் கொண்ட அரசியல் வியூகங்கள், பொருளாதார அபிவிருத்தி திட்டங்கள் என்பன அரசாங்கம் எதிர் நோக்குகின்ற ஏனைய சவால்களை இலகுவாக வெற்றி கொள்ள கைகொடுக்கும் உபாய மார்க்கங்களாகும். எவ்வாறாயினும் அரசாங்கம் ஒன்று பதவிக்கு வந்து ஒரு வருட காலப்பகுதிக்குள் அனைத்தையும் சாதிக்க முடியாது.

அதனால் மக்கள் மத்தியில் இருந்தும் முழுமையான அர்ப்பணிப்பும், ஆதரவும் ஒத்துழைப்பும் பலமானதாக தேவைப்படுகின்றது.

இந்த அனைத்தும் ஒன்றாக இணைந்தால் மலரும் 2025 ஆண்டு புது வருடம் இந்நாட்டிற்கு சுபீட்சம் நிறைந்த ஆண்டாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

பிரதி புதன்தோறும் உதயம் பத்திரிகையை உங்கள் பார்வைக்கு பெற்றுக்கொள்ள இங்குள்ள QRஐ Scan செய்து எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து கொள்ளுங்கள்
www.uthayam.lk

# அபாபீல் உதவும் கரங்களால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு




(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

பிரான்ஸ் நாட்டில் வாழும் இலங்கை முஸ்லீம் அமைப்பின் அனுசரணையில் அபாபீல் உதவும் கரங்கள் அமைப்பினால் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்விச்செயற்பாடுகளுக்கு உதவும் நோக்கில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

அமைப்பின் தலைவர் எம்.சி.எம். அமீன் தலைமையில் காவத்த முனை அல் அமீன் வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் வித்தியாலய அதிபர் ஏ.ருபாய்தீன் மற்றும் ஆசிரியர்கள், அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

காவத்தமுனை அல் அமீன் வித்தியாலயம் மற்றும் காகித நகர் மில்லத் வித்தியாலயங்களைச் சேர்ந்த வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட 160 மாணவர்களுக்கு இக்கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சுனாமிக்கு 20 ஆண்டுகள். களுத்துறை மாவட்ட செயலகத்தில் விஷேட சமய நிகழ்வுகள்



(பீ.எம் முக்தார்)

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு 20 வருடங்கள் பூர்த்தியை முன்னிட்டு களுத்துறை மாவட்ட செயலகத்தில் விஷேட சமய நிகழ்ச்சிகள் இடம் பெற்றது.

இந்த கடற்கோள் அனர்த்தத்தின் போது உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து 2 நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

மாவட்ட செயலாளர் ஜனக கே. குணவர்தன தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றதுடன் மாவட்ட செயலக உயர் அதிகாரிகள் பலர் இதில் பங்குபற்றினர்.

# மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் சுனாமி நினைவு தின நிகழ்வும், குருதிக்கொடையும்!



(நூருல் ஹுதா உமர்)

சமூக நல விடயங்களில், மனிதாபிமான ரீதியாக சிறப்பாக இயங்கும் மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த சுனாமி அனர்த்த தினத்தின் இருபதாவது நினைவு முன்னிட்டு ஏற்பாடு செய்த சுனாமி நினைவு தின நிகழ்வும், குருதிக்கொடையும் கடந்த வியாழக்கிழமை(26) மாளிகைக்காடு மத்தி தோணா வீதியில் அமைந்துள்ள ஜனாஸா நலன்புரி அமைப்பின் கட்டிடத்தில் நடைபெற்றது.

சுனாமியில் மரணித்த ஷுஹதாக்களை நினைவு கூர்ந்து நடைபெறும் இந்த இரத்த தான முகாமை அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். ஜெகராஜன், காரைதீவு பிரதேச செயலாளர் ஜீ. அருணன், காரைதீவு உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்தீபன் உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த இரத்த தான முகாமில் கலந்து கொண்டு இரத்த தானம் செய்ய ஆர்வமுள்ள அமைப்பின் உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு குருதிக் கொடை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கிலங்கையின் கல்விப் பொக்கிஷமான பேராசிரியர் இஸ்ஹாக் மறைவு கவலை தருகின்றது

**மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் அனுதாபம்!**



சமூகம் சார்ந்த அதிகூடிய சிந்தனையினை சதாவும் கொண்டிருந்த கிழக்கிலங்கையின் கல்விப் பொக்கிஷமான பேராசிரியர் அல்ஹாஜ் எம்.இஸ்ஹாக் அவர்களின் மறைவு ஆழ்ந்த கவலையை அளிப்பதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

மர்ஹூம் இஸ்ஹாக் அவர்களின் மறைவு தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் மேலும் கூறியுள்ளதாவது,

“தென்கிழக்குப் பல்கலைக்கழகத் திற்கான பொறியியல்பீடத்தின் உருவாக்கத்திற்கு பெரும் பங்காற்றியதுடன், சிறந்த கல்வியியலாளர்களின் அவசியம் தொடர்பில் நன்கு அறிந்திருந்தவராகவும் மர்ஹூம் இஸ்ஹாக் அவர்கள் இருந்துள்ளார்.

பல்வேறு சர்வதேச கற்கைகளையும் அதேபோன்று, இலங்கைக்குள்ளும் பல்துறை செயற்பாடுகளுடன் பயணித்த ஒரு நல்லுள்ளம் கொண்டவராகவும் இவரை அடையாளப்படுத்த முடியும்.

சவூதி அரேபியாவில் நீண்டகாலம் பணிபுரிந்த நிலையில், கிழக்கில் வீடமைப்புத் திட்டத்தினை வறிய மக்களுக்காக சவூதி அரேபியாவின் உதவியுடன் நிர்மாணித்துக் கொடுத்துள்ளார்.

இதேபோன்று, கிழக்கிலங்கையில் அரபு பல்கலைக்கழகத்தின் தேவை உணர்ந்து, அதனது இயக்கத்தின் வளர்ச்சிக்காக பெரும் பங்காற்றியவர்.

மிகவும் அன்பாகப் பழகும் சிறந்த பண்புகளைக் கொண்டவர். புனித உம்ராக் கடமையை நிறைவு செய்ய மக்கா சென்றிருந்த வேளை, இந்த மரணம் சம்பவித்துள்ளமை ஆழ்ந்த கவலை தருகின்றது.

அன்னாரது மறுமை வாழ்வுக்காகப் பிரார்த்திப்பதுடன், அன்னாரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், கல்விச் சமூகத்திற்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

# கல்முனை மாநகர நூலகங்களுக்கு புதிய நூல்கள் கையளிப்பு!



(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பொது நூலகங்களுக்கு புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட நூல்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கல்முனை மாநகர ஆணையாளர் என். எம். நௌபீஸ் தலைமையில் இடம்பெற்ற போது மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸ்ம், பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி, கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என். பரமேஸ்வர வர்மன் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர். இதன்போது புதிதாக வெளிவந்துள்ள கல்வி, சமூகம், கலாசாரம், கவிதை, கலை, இலக்கியம், விஞ்ஞானம் மற்றும் பொருளாதாரம் உள்ளிட்ட பல்துறை அறிவு சார்ந்த நூல்களும் ஜி.சி.ஈ. உயர்தர பரீட்சைகளின் கடந்த கால மற்றும் மாதிரி வினாப்பத்திரங்கள் அடங்கிய பெறுமதியான புதிய நூல்களும் வழங்கி வைக்கப்பட்டன.

கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை மற்றும் நற்பிட்டிமுனை பொது நூலகங்களுக்கான ஒவ்வொரு தொகுதி நூல்கள் அவற்றின் நூலகர்களான ஏ.எல். முஸ்தாக், ஏ.எச்.தௌபீக், ஏ.சி.ஹரீஷா, எஸ்.எம்.ஆர். அமீனுத்தீன் ஆகியோரிடம் சம்பிரதாயபூர்வமாக கையளிக்கப்பட்டன.

# பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இலங்கை, இந்திய தலைவர்கள் ஆர்வம்

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



திருச்சி. ஷாகுல் ஹமீட்



இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதாரத் தொடர்பை மேம்படுத்தும் முயற்சியில் இந்திய அரசு அதிக ஆர்வம் காட்டுகின்றது என்பது ஒரு புறம் இருக்க, இந்தியாவுக்கும் – இலங்கைக்கும் இடையில் நிலவும் எல்லா பிரச்சினைகளையும் நல்ல முறையில் தீர்த்துக் கொள்வதற்கு இலங்கை ஜனாதிபதியும், இந்திய பிரதமரும் ஆர்வம் காட்டுகின்றார்கள் என்பது மகிழ்ச்சியளிக்கக் கூடியதாக அமைந்திருக்கின்றது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொள்ள தமிழகத்திற்கு வந்திருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்கு சனிக்கிழமை (28), இந்திய யூனியன் முஸ்லிம் லீக், இராமநாதபுரம் மாவட்டம் சார்பில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன், மாநில முதன்மைத் துணைத் தலைவர் எம். அப்துல் ரஹ்மான், மாநில துணைத் தலைவரும், தமிழ்நாடு வக்பு வாரிய தலைவருமான கே. நவாஸ் கனி, மாநில பொருளாளர் எம். எஸ். ஏ. ஷாஜஹான், இராமநாதபுரம் மாவட்ட தலைவர் வருசை முஹம்மது, மாவட்ட செயலாளர் பைசல், மாநில துணைச் செயலாளர் மேலப்பாளையம் அப்துல் ஜப்பார் மற்றும் நிர்வாகிகள் சிறப்பான வரவேற்ப ளித்தனர்.

பின்னர், இராமநாதபுரம் விருந்தினர் இல்லத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம். பி செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார். அதன்போது அவர் கூறியதாவது :

நான் தனிப்பட்ட அலுவல் காரணமாக இப்பொழுது இந்தியா வந்திருக்கின்றேன். இருந்தபோதிலும், உங்களோடு சில கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளும் இந்த நல்ல வாய்ப்பைப் பெற்றமைக்காக நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்தியா இலங்கை இடையிலான நட்புறவுக்கு மிகப் பெரும் பாலமாகத் திகழ்ந்தவரும், இந்திய பொருளாதாரத்தின் சிற்பியாகத் திகழ்ந்துவருமான இந்திய முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களது மறைவுச் செய்தி பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்திய அரசுக்கும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினருக்கும், கூட்டணிக் கட்சியினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அவர் இந்திய இலங்கை நட்புறவுக்குப் பாலமானவர் மட்டுமல்லர், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகப்பெரிய தூ ணாகவும் திகழ்ந்தவர் என்ற அடிப்படையில், இந்த முழு பிராந்தியத்திலும் அவருக்கென தனிச்சிறப்பும், தனி முக்கியத்துவமும் இருக்கிறது என்பதை நாம் எல்லோரும் நன்றாக அறிந்திருக்கின்றோம். அப்படிப்பட்ட பொருளாதார நிபுணரின் மறைவு நம் அனைவரையும் பாதித்திருக்கின்றது என்றால் மிகையாகாது.

இலங்கையில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற இலங்கை ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க இந்தியாவுக்கு அண்மையில் வருகை தந்துவிட்டு சென்றிருக்கின்றார். அவரது இந்த விஜயம், இந்திய இலங்கை நட்புறவு மென்மேலும் மேம்படுவதற்கு முக்கிய காரணமாக அமையும் என்று நம்புகிறேன்.

இந்தியா ,இலங்கை நாடுகளுக்கு இடையிலான பொருளாதாரத் தொடர்பை மேம்படுத்தும் முயற்சியில் இந்திய அரசு மிகுந்த ஆர்வத்தைக் காட்டுகிறது என்பது ஒரு புறம் இருக்க, இந்தியாவுக்கும் – இலங்கைக்கும் இடையில் நிலவும் எல்லா பிரச்சனைகளையும் நல்ல முறையில் தீர்த்துக் கொள்வதற்கு இலங்கை ஜனாதிபதியும், இந்தியப் பிரதமரும் ஆர்வம் காட்டுகின்றனர் என்பது எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி தரக்கூடியதாக அமைந்திருக்கிறது.

**கேள்வி: இந்திய இலங்கை மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இத்தனை ஆண்டுகள் ஆகின்றனவே? இன்னும் தீர்வு வரவில்லையே, ஏன்?**

பதில்: எனது அன்பு நண்பர் நவாஸ் கனி யும், சகோதரி கனிமொழியும் அடிக்கடி என்னிடம் கொண்டு வருகின்ற துர்ப்பாக்கியமான பிரச்சினை இது. இந்தியா, இலங்கை இரண்டு நாடுகள் மட்டும் தீர்மானித்துவிட்டால் இந்த பிரச்சனை தீர்ந்து விடாது. மாறாக, இது ஒரு சமூகப் பிரச்சினை. இருநாட்டு மீனவ மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினை. இதை உணர்ந்து கொண்டு, அதற்கு ஏற்ப சில விட்டுக்கொடுப்புகளை இரு தரப்பும் செய்து கொண்டால், நல்லதொரு சுமூகமான முடிவு கிட்டும். அப்படிக் கிடைக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய விருப்பமும், அவாவுமாக இருக்கின்றது.

தமிழ் பேசும் மக்கள் என்கின்ற அடிப்படையில், தமிழ்நாட்டு மக்களுக்கும் – இலங்கை வட பகுதி வாழ் மீனவ மக்களுக்கும் இடையில் பாரம்பரியமான தொப்புள் கொடி உறவு இருக்கிறது. எனினும், இலங்கை கடற்படையினர் அத்துமீறலாக நடந்து கொள்கின்றார்கள் என்ற சொல்லாடல்கள் தமிழ்நாட்டில் அடிக்கடி நடப்பதும், அதுபோல தங்களுடைய மீன்வளங்களை இந்திய மீனவர்கள் அளவுக்கு மீறி அபகரித்துக் கொள்கிறார்கள் என இலங்கை மீனவர்களும் அடிக்கடி இந்த விவகாரத்தில் முன்னுக்குப் பின் முரணாக பல அம்சங்களைச் சொல்லித் திரிவது ஆரோக்கியமானதல்ல. எனவே, இவ்விரு தரப்பினருக்கும் இடையில் இப்பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

எனவே, இது தொடர்பில் இலங்கை அரசு, இந்திய மத்திய அரசு, தமிழ்நாடு மாநில அரசு, இந்திய – இலங்கை மீனவர்கள் அனைவரும் இணைந்து தீர்வு காண வேண்டும். அதற்கான முயற்சிகள் பல கோணங்களில் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. அதுவரையிலாவது இருதரப்பிலும் அத்துமீறல்களும், அடாவடித்தனங்களும், பறிமுதல்களும் நிறுத்தப்பட வேண்டும் என்பதுதான் எல்லோரினதும் கோரிக்கையாக இருக்கின்றது.

அண்மையில் இந்திய தலைநகர் புது டில்லிக்கு விஜயம் செய்த இலங்கை அதிபரிடத்தில் இந்திய அரசும் இதைத்தான் கூறியிருக்கின்றது. எனவே, இது தொடர்பில் ஆரோக்கியமான நல்ல முடிவு நிச்சயம் கிடைக்கும் என்று நாங்கள் பெரிதும் நம்புகிறோம்.

நீங்கள் கூறுவதைப் போல இலங்கை மீன்பிடி அமைச்சர் சூடாகப் பேசுவதான ஒரு செய்தியை நானும் பார்த்தேன். ஒரு தேர்தல் முடிந்த சூட்டோடு அமைச்சர் காரசாரமாகக் கதைப்பது என்பது சர்வசாதாரணமாக நடக்கின்ற ஒரு நிகழ்வுதான். அப்படித்தான் இதுவும் இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

இப்படி கதைப்பதன் மூலம் நாம் சார்ந்த மீனவ சமூகத்திற்கு கொல்லி போடக்கூடிய வேலையாக தான் இது இருக்கும். இது தொடர்பில் இன்னும் நல்லிணக்கத்துடன் தீர்வு காணப்பட வேண்டும் என்பதுவே இப்போதைய தேவையாக இருக்கிறது. அப்படித்தான் முதிர்ச்சியடைந்த அரசியல்வாதிகள் நினைக்கிறோம்.

எனவே, இன்னும் கொஞ்சம் கூடுதலாக ராஜதந்திரமாக நடப்பதுதான் நல்லது. இது இரண்டு தரப்பிலும் நிலவும் மனிதாபிமான, வாழ்வாதாரப் பிரச்சினை. இதனால் சில சட்டமீறல்கள் நடக்கத்தான் செய்கின்றன. இயன்ற வரை கொஞ்சம் நெகிழ்வுத்தன்மையோடு இப்பிரச்சினையை அணுகுவதுதான் சாலச் சிறந்ததாக அமையும் என்பதே எமது தாழ்மையான அபிப்பிராயம். இதையே நாங்கள் இரு தரப்பிலும் வலியுறுத்தியும் வருகிறோம்.

**கேள்வி: இலங்கை மற்றும் இந்திய மீனவர்கள் பிரச்சினை அடிக்கடி நடக்கிறது நிரந்தர தீர்வு என்ன?**

பதில்: தமிழ்நாட்டு மீனவர்கள் இதை உணர்வுபூர்வமான அம்சமாகப் பார்க்கின்ற காரணத்தினால், இலங்கை அரசுடன் இந்திய மத்திய அரசு தொடர்பு சற்று நெகிழ்வுத் தன்மையுடன் நடந்து கொள்ளும் என நம்புகின்றோம். சட்டத்துக்கு அப்பால் இது வாழ்வாதாரப் பிரச்சினை. ஆழ்கடல் மீனவர்களுக்கு அவர்களுக்கான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான ஏற்பாடுகள், பாக்கு நீரிணையில் இருக்கின்ற மீன் வளங்கள் அளவுக்கு அதிகமாகச் சூறையாடப்படுகின்றன என்பதுதான் இப்போதுள்ள பிரச்சினை. எனவே இதற்கான மாற்றுத் தீர்வுகளை விரைவாக வழங்கியாக வேண்டும்.

மீன்வளம், மீன்களின் இனப்பெருக்கம், ஆகியவற்றைப் பாதிக்கும் வகையிலான மீன்பிடி முறைகள் இருநாட்டு மீனவர்களுக்கிடையிலும் இருக்கின்றன என்பதுதான் இந்தப் பிரச்சினையின் மூலம். எனவே மாற்றுத் தீர்வு காண்பதற்கான சில வழிமுறைகளை இரண்டு மீனவ சமூகங்களும் கூட்டாகப் பேசி, விட்டுக் கொடுத்து நிரந்தர தீர்வுக்கு வரவேண்டும்.

இது இன்று நேற்று தொடங்கிய பிரச்சினையல்ல. இது போலவே ஐரோப்பா, ஆபிரிக்க நாடுகள், பிலிப்பைன், மலேசியா, வியட்நாம் உள்ளிட்ட நாடுகளிலும் இந்தப் பிரச்சினை நெடுங்காலமாக இருந்து வருகின்றது. காரணம், கடல் சூழப்பட்ட வெவ்வேறு நாடுகளில் இப்பிரச்சினைகள் ஏராளமாக இருக்கத்தான் செய்யும். எனவே இதில் நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டுமானால், இப்பொழுது இருப்பதை விட இன்னும் நெகிழ்வுத்தன்மையோடும், விட்டுக் கொடுத்தும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும்.

**கேள்வி: இலங்கையில் மாகாணத் தேர்தல் வரும்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் இணைந்து பயணிப்பீர்களா அல்லது உங்கள் நிலைப்பாடு என்ன?**

பதில்: இதுகுறித்து கட்சி கூடித்தான் தீர்மானிக்க வேண்டும். மாகாண சபை தேர்தலுக்கு முன்பு உள்ளூராட்சி சபை தேர்தல் நடப்பதாகத்தான் இப்பொழுது சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் அடிப்படையில் சில சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் அடுத்த அமர்வில் நிறைவேற்றப்படவிருக்கின்றன. மீனவர் பிரச்சினை குறித்து எழுந்தது போல, மாகாண சபை தேர்தல் குறித்தும் ஒரு சர்ச்சை எழுந்திருந்தது. இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயத்திற்குப் பிறகு மாகாண சபை தேர்தல் தொடர்பிலும் இந்திய அரசு கொஞ்சம் கரிசனை காட்டுவதாகச் சொல்லப்படுகிறது.

**கேள்வி: உங்களுடன் பயணித்த மூத்த அரசியல் தலைவர் மனோ கணேசன் உள்ளிட்டவர்களையெல்லாம் நடைபெற்று முடிந்த இலங்கை பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் பெரிதும் புறக்கணித்திருக்கின்றார்களே? இது குறித்து என்ன கருதுகின்றீர்கள்?**

பதில்: இம்முறை நடைபெற்ற தேர்தல் என்பது ஒரு சுனாமி பேரலையைப் போல. இம்முறை ஒரு மாறுபட்ட அரசியல் சூழல் உருவாகியிருந்தது. பல மூத்த தலைமைகள் தோல்வியைத் தழுவினாலும், நண்பர் மனோ கணேசன் பாராளுமன்ற உறுப்பினராக எப்படியும் வர வேண்டும் என்பதற்காக தேசிய பட்டியல் ஊடாக அவருக்குப் பாராளுமன்ற அந்தஸ்தை எங்களது கூட்டணி வழங்கியிருக்கின்றது. இன்னும் பலர் இம்முறை பாராளுமன்றத்தில் இடம்பெறவில்லை என்பது கவலைக்குரியதாக இருந்தாலும், ஜனநாயகத்தில் இவை அனைத்தும் சகஜமாக நடப்பவைதான் என்ற அடிப்படையில் இவற்றையெல்லாம் கடந்து செல்ல வேண்டியதுதான்.

**கேள்வி: இலங்கை அதிபர் அண்மையில் இந்தியா வந்தார். அடுத்த மாதம் சீனா செல்வதாக செய்திகள் கூறுகின்றன. இலங்கை அரசு யாருடன் உண்மையான நட்பு பாராட்டுகிறது?**

பதில்: இலங்கையைப் பொறுத்தமட்டில் எங்களது அரசின் வெளியுறவுக் கொள்கை சர்வதேச மட்டத்தில் எல்லா நாடுகளையும் ஒரே அளவில் கையாள வேண்டும் என்பதாகத்தான் இருக்கின்றது. அது அப்படித்தான் இருக்கவும் வேண்டும். அதிலும் இந்தப் பிராந்தியத்தில் இலங்கை ஒரு மிகச்சிறிய நாடு என்கின்ற அடிப்படையில், அண்டை நாடுகள் அனைத்தோடும் நல்ல உறவைப் பேண வேண்டும் என்று இலங்கை கருதுகிறது.

இலங்கையில் நிலவிய பொருளாதார நெருக்கடியின்போது இந்திய அரசு மிகப் பெரிய அளவில் உதவியது. அண்மையில் நிலவிய கொரோனா கொடுந்தொற்று தொடர்பில் இலங்கை மக்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளைப் பாரிய அளவில் செய்தது. இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினையின்போது 4 பில்லியன் அமெரிக்க டாலெர்கள் வரை மிகப்பெரிய பொருளாதார உதவியைத் தந்துதவி, எங்களைப் பொருளாதார பின்னடைவிலிருந்து பாரிய அளவில் மீட்டெடுத்திருக்கினன்றது இந்திய அரசு என்பதையெல்லாம் நாங்கள் எளிதில் மறந்து விட முடியாது.

இந்தியா, சீனா நாடுகளுடன் எங்களுக்குள்ள கடனை மறுசீரமைப்புச் செய்வதற்கான விவகாரத்தில் சர்வதேச நாணய நிதியின்(ஐஆகு) மேற்பார்வையில் நாங்கள் உடன்பாடு கண்டிருக்கின்றோம். இப்படியான சூழலில், இலங்கைக்கான பொருளாதார உதவிகளைப் பாரியளவில் தந்துதவிய இவ்விரு நாடுகளுக்கு இடையிலும் சம அளவில் உறவுகளைப் பேண வேண்டிய கடப்பாடு எங்களுக்கு இருக்கினன்றது. எனவே, இலங்கை அதிபர் டெல்லிக்குப் போய்விட்டு பீஜிங்குக்கும் போகின்றார் என்பது குறித்து யாரும் மாற்றமாக எண்ணிக் கொள்ள வேண்டியதில்லை. எல்லாம் சுமூகமாக நடக்கும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

**கேள்வி: இலங்கையில் பொருளாதார வீழ்ச்சியின் காரணமாகத்தான் மிகப்பெரிய மக்கள் புரட்சி ஏற்பட்டி ருக்கின்றது. இந்தக் குறுகிய காலத்தில் அனுர உடைய அரசியல் ஸ்திரத்தன்மை எப்படி இருக்கிறது?**

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதேசவுக்கு வடக்குப் பகுதியில் அதிக வாக்குகள் கிடைத்தன. எனவே இவருக்கு அங்கு ஆதரவு இருக்கின்றதா, இல்லையா? வடக்கில் இப்பொழுதுள்ள சூழ்நிலை என்ன? அத்தியாவசியப் பொருட்களுக்கான விலையும் அடுத்தடுத்து ஏறிக்கொண்டே செல்வதுக்கான காரணம் என்ன?

பதில்: நாங்கள் இந்தியாவுக்கு வந்தாலும் சரிநண்பர் நவாஸ் கனி இலங்கைக்கு வந்தாலும் சரி எங்கள் உள்நாட்டு அரசியல் குறித்து வெளிநாடுகளில் அலட்சியமாகப் பேசுவதில்லை. உள்நாட்டில் நாங்கள் வெவ்வேறு விதமான அரசியல் போட்டிகளில் இருக்கத்தான் செய்வோம். இப்பொழுது தேர்தல் முடிந்து விட்டது. அவர் எங்கள் நாட்டின் அதிபர். அவரது தலைமையில்தான் நாடு முன்னேறிச் செல்ல வேண்டியி ருக்கிறது. இந்தியாவுடனான உறவு முன்னரை விட பெரிதும் மேம்பட வேண்டும் என்பதே எங்களது எதிர்பார்ப்பு. இதைத் தாண்டி உங்களது இதர கேள்விகளுக்கு விடையளிப்பதை நான் தவிர்த்துக் கொள்கிறேன்.

**கேள்வி: கச்சத்தீவு ஒப்பந்தம் விஷ யமாக மீண்டும் இந்தியாவிடம் ஒப்படைக்க சாத்தியம் இருக்குமா?**

பதில்: கச்சத்தீவு ஒப்பந்தம் என்பது 1970களின் தொடக்கத்தில் இந்தியாவின் பெருந்தன்மை அடிப்படையில் செய்து தீர்வு காணப்பட்ட இந்திய – இலங்கை நாடுகளுக்கு இடையிலான ஒப்பந்தம். அது முடிவாக்கப்பட்ட ஒரு விவகாரம். அப்படியிருக்க, அதை மீளக் கிண்டிக் கிளறி, அதன் காரணமாக இந்திய – இலங்கை உறவில் விரும்பத்தகாத ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முயலாமல், இப்பொழுது இருக்கும் பிரச்சினைகளை நல்ல முறையில் தீர்ப்பதற்கு எல்லோரும் இணைந்து முயற்சிப்பதுதான் சாலச்சிறந்தது காலத்தால் அவசியமானது – என்றார்.

# சவூதி தூதுவரின் புத்தாண்டு வாழ்த்து செய்தி

எனது சார்பிலும், இலங்கை குடியரசில் உள்ள சவூதி அரேபிய தூ தரகத்தில் பணியாற்றும் எனது சக ஊழியர்களின் சார்பிலும், இலங்கை நட்பு அரசாங்கத்திற்கும் அதன் மக்களுக்கும் எனது மனமார்ந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இவ் ஆண்டு இலங்கைக்குடியரசிற்கும், அதன் மேன்மைமிகு மக்களுக்கும் நன்மை, அமைதி மற்றும் செழிப்பு நிறைந்த ஆண்டாக இருக்க



வேண்டும் என்றும், எமது இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு மற்றும் உறவு அனைவருக்கும் நன்மை பயக்கும் வகையில் தொடர வேண்டும் என்று எல்லாம் வல்ல இறையவனிடம் பிரார்த்திக்கிறோம்.

புத்தாண்டு நல்வாழ்த்துகள்! முழு உலகமும் அமைதியும் செழிப்பும் அடைய இறைவன் அருள் புரியட்டும்.

அன்புடன்,
காலித் பின் ஹமூத் அல்-கஹ்தானி
இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர்

# களுத்துறை மாவட்ட செயலக வருட ஆரம்ப சத்தியப் பிரமாணம்



(எம்.எஸ்.எம்.முன்தஸிர்)

களுத்துறை மாவட்ட செயலகத்தின் 2025 புத்தாண்டுக்கான கடமை ஆரம்பிக்கும் நிகழ்வு மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலாளர் ஜனக கே. குணவர்தன தலைமையில் இடம்பெற்றது.

இதனை தொடர்ந்து முதல் நாள் கடமைகளை ஆரம்பிக்கும் அரச சேவை சத்தியப் பிரமாண நிகழ்வு மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இந்த புதுவருட கடமை ஆரம்ப சம்பிரதாய நிகழ்வுகளின் விஷேட அம்சமாக ஜனாதிபதியின் எண்ணக் கருவியான "தூய்மையான இலங்கை" திட்டத்துடன் இணைக்கப்பட்ட உறுதிமொழியை உத்தியோகத்தர்கள் எடுத்துக் கொண்டனர்.

மேலும் ஜனாதிபதியின் தலைமையில் கொழும்பில் இடம்பெற்ற "க்ளீன் ஸ்ரீலங்கா" தேசிய வேலைத் திட்டத்தின் நேரலையை உத்தியோகத்தர்கள் பார்வையிட்டனர் .

மாவட்ட செயலக பணியாட்கள் குழைத்துக் அரச அதிபர் புத்தாண்டு வாழ்த்துறை வழங்கினார்.இந்த நிகழ்வில் அவர் மேலும் கருத்துரையாற்றுகையில்:-

சிறந்த பண்பான அரச சேவைக்காக அனைவரும் ஒன்றுபட்டு அர்ப்பணத்துடன் செயலாற்ற வேண்டும் எனவும் தேவைகளுக்காக வரும் மக்களுக்கு ஆகக்கூடிய சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் நாட்டின் தேசிய வளத்தைப் பாதுகாத்துக்கொள்ள முடிவதாகவும் தெரிவித்தார்.

# புத்தசாசன சமய மற்றும் கலாசார அமைச்சில் பணி ஆரம்பிப்பு நிகழ்வு



(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

2025 புதிய வருடத்தில் அரச கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வுகள் சகல அரச திணைக்களங்களிலும் இன்று சிறப்பாக இடம் பெற்றது.

இந்த வகையில் புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் வரும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கத்தோலிக்க கலாசார திணைக்களம் என்பன இணைந்து மருதானையில் உள்ள அலுவலக வளாகத்தில் தேசியக் கொடியை ஏற்றி சமய அனுஷ்டானங்களையும் மேற்கொண்டனர்.

இதன்போது நாட்டிற்காக உயிர் நீர்த்தவர்களுக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலியும் மேற்கொண்டனர்.

மேற்படி நிகழ்வில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ்இ கத்தோலிக்க கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி சத்துரி பின்டோ, இந்து கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் அநிருத்தனன் உள்ளிட்ட உதவிப்பணிப்பாளர்கள், கணக்காளர்கள், நிருவாக உத்தியோகத்தர்கள் மற்றும் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதிச் செயலகத்தினூடாக நேரடியாக ஒலிஇ ஒளி பரப்பப்பட்ட நேரடி ஒலிபரப்பு மூலம் புதிய வருடத்திற்கான சத்தியப் பிரமாண நிகழ்வுடன் இணைந்து அந்தந்த அலுவலங்களில் அலுவலர்கள் தமது சத்தியப் பிரமாணங்களையும் மேற்கொண்டனர்.




# புத்தக வாசிப்பிற்கு அடிமையாதல்

மனிதன் எதை நேசிக்கின்றானோ பெரும்பாலும் அதற்கு தன்னை அடிமைப்படுத்திக் கொள்வான் அதற்காகவே தன்னுடைய ஆயுளை நேரத்தை என அனைத்தையும் அர்ப்பணம் செய்ய தயாராக இருப்பான்.

மனித வாழ்வுக்குப் பயன்படத்தக்க ஆரோக்கியமான சில விடயங்களுக்கு நாங்கள் அடிமையாக மாறாவது தவறாக அமையாது.

தனி மனிதன் குடும்பம் சமூகம் உலகம் மறுமை என்று வருகின்ற சந்தர்ப்பத்தில் அனைத்துக்கும் பயன் தரத்தக்கவிதமாக அமையக்கூடிய ஒன்றுதான் புத்தக வாசிப்பு. அது மாத்திரமன்றி அதனை இறைவன் வணக்கமாக முதல் கட்டளையாக அமைத்து வைத்திருக்கின்றான்.

இத்தகைய அருள் நிறைந்த புத்தக வாசிப்பு எமது வழக்கமாக வழக்கமாக வாழ்வாக அமைய வேண்டும்.

ஆரோக்கியமும் நேர அவகாசமும் மிகப்பெரும் இறை அருள்களாக அதே நேரம் மனிதர்கள் அலட்சியமாக இருக்கக்கூடிய விடயங்களாக நபிகளார் அடையாளப் படுத்தினார்கள். இந்த நபி மொழியின் பின்புலத்தில் இருந்து நோக்கினால் உடல் ஆரோக்கியம் சிந்தனை ஆரோக்கியம் மிகச் சிறப்பாக இருக்கும் நிலையில் எமது நேர காலத்தை முதலீடு செய்வதற்கான மிகப்பெரிய தளமாக புத்தக வாசிப்பு அமைகின்றது.

பரபரப்பும் சோலிகளும் அழுத்தங்களும் நிறைந்த உலகில் அநேகமானோர் புத்தகங்களை விட்டும் கடுகதிவேகத்தில் ஒதுங்கி தூரப்பட்டு செல்கையில் இதனை தனக்கு சாதகமாக அமைத்துக் கொள்வது மிகப்பெரும் பாக்கியமே.

சமூக மாற்றத்திற்குத் துணை நிற்கக் கூடிய வகையில் சமூகவியல் அரசியல் அறிவியல் உளவியல் சமயம் கலை என்ற அடிப்படையில் புத்தகங்களை தெரிவு செய்து வாசிக்கின்ற பொழுது ஒரு மனிதன் தன்னுடைய சிந்தனை தளத்தை பன்முகப்படுத்தி அமைத்துக் கொள்வதோடு பல்துறை சார்ந்த வாசகனாகவும் தன்னை தகவமைத்துக் கொள்கின்றான்.

கிணற்றுத் தவளைகளாக எதுவும் தெரியாமல் இருப்பதனை விடவும் வாழ்நாள் நீடித்த கற்றலுக்கு துணை போகக்கூடிய புத்தக வாசிப்புக்கு அடிமையாவது எந்த விதத்திலும் பயனற்ற ஒன்றாக அமையாது

அடிப்படை வணக்கங்களுக்கோ அன்றாட கடமைகளுக்கோ எத்தகைய பாதிப்பையும் ஏற்படுத்தாத வகையில் ஒருவர் வாசிப்பில் மூழ்கி விடுவதன் காரணமாக எண்ணற்ற உளவியல் சார்ந்த நலவுகளையும் பெற்றுக் கொள்ள முடியும். அதேபோல மறுமை சார்ந்த நலவுகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.

வீண் விளையாட்டுக்களில் நேரத்தை செலவிட்டு புறம் பேசி குறை சொல்லி அரட்டை அடிப்பதில் நேரத்தை குவிப்பதை விடவும் தன்னை ஒழுங்குப்படுத்திக் கொள்ள தன்னுடைய சிந்தனையை பலப்படுத்திக் கொள்ள தன்னுடைய மொழியாற்றலை தனக்குள் இருக்கின்ற ஏனைய ஆற்றல்களை பலப்படுத்திக் கொள்வதற்கு வாசிப்பை நாங்கள் பயன்படுத்துகின்ற பொழுது அது பயனுள்ளதாக நிச்சயம் அமையும்.

வாழ்வின் ஏனைய அடிப்படை அம்சங்களுக்கு பாதிப்பில்லாத வகையில், வாசிப்புக்கு அடிமையாதல் என்பதும் ஒருவித சுகானுபவம் தான்.




நாச்சியாதீவு பர்வீன்

# மெல்லுணர்வுகளும் சொல்லோவியங்களும் நிறைந்த திக்ராவின் "வாப்பாக்கு" கவிதை நூல்

**பாவேந்தல் பாலமுனை பாறூக்**

ஈழத்து இலக்கிய உலகில் நூல் வெளியீட்டு முயற்சிகள் தற்போது தொடர்ந்து நடைபெற்று வருவதனை அவதானிக்க முடிகின்றது. இளைய படைப்பாளர்களின் இதயத்துடிப்பை, நூல் வெளியிடுவதில் அவர்களுக் குள்ள தாகத்தை அறிந்து கொண்டு, அத் தாகத்தைத் தீர்த்து வைக்கும் வகையில் வெளியீட்டு வசதிகளைச் செய்து கொடுப்பதற்குச் சிலர் முன்வருகின்றனர். இளையவர்கள் அமைப்புகளாகச் சேர்ந்து கொண்டும் நூல்களைத் தருகின்றனர். "நூறுபூக்கள் மலரட்டும்" என்ற தூய எண்ணத்தைச் செயற்படுத்தி இவ்வாறான நூல்களைத் தரும் அமைப்புக்களி லொன்றாக ஏட்டுலாக் கனவாக்கம் செயற்பட்டுவருகின்றது .

ஆஷிக் /ஹஸைன் என்பவரை பணிப்பாளராகக் கொண்டு இயங்கிவரும் ஏட்டுலாக் கனவாக்கத்தின் இரண்டாவது நூலாக இம்மாதம் ( நவம்பர் 2024) விரிந்திருக்கிறது ,80 கவிதைகளைக் கொண்ட 128 பக்க நூல்.

"வெண்பாவினால் விளக்கேற்றி விந்தைகள் செய்த இறைநேசக் கவிஞர் அட்டாவதானி அருள் வாக்கி அப்துல் காதர் பிறந்த மண்" என்று இலக்கிய உலகில் புகழ் பூத்திருக்கும் தெல்தோட்டைப் பதியிலிருந்து மலர்ந்திருக்கும் புதுக்கவிதை நூல் இது. அப்பதியைச் சேர்ந்த யாழ் பல்கலைக்கழகக் கலைப் பட்டதாரி, கவிஞை,திக்ரா ஹனீபா தரும் அந்நூலின் பெயர் "வாப்பாக்கு".

"திக்ராவின் கவிதைகள் நளினமாகவும் மென்மையும் உண்மையும் கலந்த அனுபவங்களாகவும் உருவாகி உள்ளன. ஒவ்வொரு கவிதையிலும் ஓர் இனம் புரியாத சோகமும், கவலையும், ஆசைகளும், அவாக்களும் இழையோடிக் காணப்படுகின்றன. வாசல் படிக்கட்டு வரை வந்து வீழ்ந்துள்ள நட்சத்திரங்கள் போல் வீழ்ந்து கிடக்கின்றன. பல்வேறு பட்ட சிறைகளுக்குள் விரும்பியும் விரும்பாமலும் அடைபட்ட பெண்களின் சாத்தியங்களும் அசாத்தியங்களும் ஆங்காங்கே துளிர் விட்டுக் கொண்டிருக்கின்றன." என்று ஆசிரிய ஆலோசகர் ஐ.எம். ஜெமீல் நூலுக்கு வழங்கியுள்ள அணிந்துரைக் குறிப்பில் சொல்லியிருக்கின்றார். இது வெறும் புழ்ச்சியல்ல என்பதை திக்ராவின் கவிதைகள் நிரூபணம் செய்கின்றன.

"என் கவிதைகள்"என்ற தலைப்பில் வரும் அவரின் கவிதை.

"குத்திக் கிழித்து வடியும்
குருதிநிறத்து
பிக்காசோவின் ஓவியம் போல
இந்த ஒற்றைச் செங்குருதி
பாபண்டேஸ் பூவின் ஸ்பரிஸத்தில்
தோன்றும் ஓராயிரம் உணர்வுகளும்
என் மௌன மடைகளை திறந்து
வெடித்துச் சிதறுகையில்
ஒரு கவிதையாய்ப் பிறக்கிறது.
புதிதாய் பிறந்த என் ஒரு கவிதை
இப்போதைக்கு
யாரோ ஒருவரை
ஆற்றுப்படுத்தலாம்
யாரோ ஒருவரை
ஆசுவாசப்படுத்தலாம்
யாரோ ஒருவரை அமைதிப்
படுத்தலாம்
இப்போதைக்கு யாராகவோ
யாருக்கோ,எங்கோ, எதுவாகவோ
எப்படியோ, மெல்லமாய் நகர்ந்து
கொண்டிருக்கலாம்.
என் வேண்டுத லெல்லாம்
கண்ணீரில் காயப்பட்ட ஒரு
இதயத்தை கொஞ்சம் தடவிக்
கொடுப்பதாய் இருக்கட்டுமேன்
என் கவிதைகள்". என்று

சொல்லும் திக்ரா, ஒரு மானுட நேயக்கவிஞராக நம்முன் மேலெழுகிறார்.

உள்மனதில் அப்பிக் கொள்ளும் சின்ன வரிக் கவிதைகள் சிலவும் நூலில் இடம் பிடித்திருக்கின்றன.

"போர்க்களத்தில் பூத்த ஒற்றைப்
பூ நம் நேசம்!
நான், நீ ,நாம் என்பது பூக்காடு"
(நாம்)

"கொஞ்சம் கண்ணீர்
கொஞ்சம் புன்னகை
ஆகர்சிக்கப்பட்டது ஆன்மா!

கொஞ்சம் வலி கொஞ்சம் சுகம்
இடைப்பட்டது இந்த ஜீவிதம்!"
(ஜீவிதம்.)

படிமச்சிறப்பும், அனுபவப் பிழிவுமாய் அமையும் கவிதைகள் நம்மை ஈர்க்கின்றன.

"கடல்களையும்,
கானகங்களையும், மலைகளையும்,
மழையையும் நிலவையும்
நட்சத்திரங்களையும்

நேசிக்கிறேன்
வேறு ஒன்றும் இல்லை
இப்பிரபஞ்சம் உடுத்திய காடு!
இயற்கையின் யட்சி நான்!"
(இயற்கையின் யட்சி)

யட்சி அழகான நுண்மையான வார்த்தைப் பிரயோகம். கவிதையைத் தூக்கி நிறுத்துகிறது சொல். "இரவிலும் கண்ணுள்ளவள்" என்று பொருள் தருகிற சொல் அது. நமக்கு பார்வையுள்ள போதும் இருளில் பார்வை தெரிவதில்லை. இரவு அனைத்தையும் தின்று தீர்த்துவிடும் .ஆனால், ஒளியை அதனால் தின்று தீர்க்க முடிவதில்லை....ஒளியில் அது மறைந்துவிடும்.

யட்சியை விளங்கிக் கொண்டு வரிகளுக்குள் நுழைகிறபோது கவிதை இன்னும் பெறுமதி தருகிறது.

"ஒரு அந்தி மாலைக் கடற்கரைக்
கால் நனைப்பு.
அண்ணாந்து பார்க்க
அமைதியான நட்சத்திர வான்.
தோள்சாய்ந்து கதை பேச
முழுநிலவுடன் ஒரு மெல்லிசை.
நீ ,நான் போதும்
கொண்டாடித் தீர்க்கலாம் வா
அன்பே!

இதோ இவ் இயற்கையோடு
கொஞ்சம் ப்ரேமத்தை
கொஞ்சம் கொண்டாடித்
தீர்க்கலாம் வா அன்பே"
(ப்ரேமம்)

காட்சிப்படிமமாக, அழகுணர்ச்சியோடு, காதல் ரசம் சொட்ட அமைந்த கவிதை பரவசம் தருகிறது.

நூலின் தலைப்பாக வரும் "வாப்பாக்கு" 17 அங்கங்களைக் கொண்ட நெடுங்கவிதை. அதுபோல உம்மாவுக்கும் ஒரு நெடுங்கவிதை தருகிறார் -உம்மா என் ஜன்னாஹ்.

வாப்பா ,உம்மா தொடர்பான உணர்வுகளை, ஏக்கங்கங்களை பாசமழை பொழிந்து நம் மனமெங்கும் பாயவிடுகிறார்.

"வாப்பா
வெறும் நினைவுகள் மாத்திரம்
இல்லை அவர். அடிக்கடி
நினைக்கவும் அவ்வளவு எளிதில்
மறக்கவும் ...
நான்
ஆம் நான்தான் அவர்
என் உயிர்
என் உருவம்
என் ஆசான், என் நேசர், என்
நட்பு, என்னைச் செதுக்கிய சிற்பி
என்னை வரைந்த பேனை
என்னை வடித்த கவிஞன்
என்னை வளர்த்த அறிஞன்
என்னை தூக்கிய உந்துகோல் என்
சாதனைகளின் சக்தி."( வாப்பாக்கு)

பட்டாம் பூச்சி வாப்பாவில் திக்ரா வைத்திருந்த அளவற்ற அன்பு கவிதை முழுவதும் தெரிகிறது.

"காலைச் சுற்றி வரும் ஒரு
பூனைக்குட்டியாய் உங்களில்
சுருண்டு கொள்ள வேண்டும்.
பற்றிக்கொள்ள வேண்டும்.
கட்டி அணைத்து உங்கள் நெற்றி
மீதும் முத்தம் இட வேண்டும்.

எனக்கு என் உம்மா ஒரு நீண்ட காவியம்.

அவள் கலிப்பா வெண்பாக்களை மிஞ்சிவரும் பாசப்பாவினால் மட்டுமே ஆன காவியம். காவியத்தை சுருக்கி கண்களில் வடிக்கத் தெரியவில்லை (உம்மா ஒரு ஜன்னாஹ்) என்று உம்மா குறித்தும் உணர்ச்சிப் பா தருகிறார் திக்ரா.

நூல், தமிழ்த் தென்றல் அலி அக்பர்,யாழ்பல்கலைக் கழக விரிவுரையாளர் த. அஜந்த குமார்,தமிழ்நெஞ்சம் ஆசிரியர் அமின் ஆகியோரின் வாழ்த்துரை,வாழ்த்துப் பாக்களையும் பெற்றிருக்கின்றது.

"வாப்பா"க்குள்ளே, சொல்லோவியங் களாகவும், மென்மையுணர்வுகளை அழகூட்டி வடித்ததாகவும் கவிதைகள் மேலெழுவதைப் பார்க்க முடிகிறது.

"புதுக்கவிதைகள் வெறும் வசன முறிவுகளல்ல" என்பதை எடுத்துக் காட்டத் தகுந்த நூலொன்றாக "வாப்பாக்கு" அமைந்திருப்பதை இங்கு சொல்லலாம்.

திக்ராவுக்கு நமது வாழ்த்துகள்..

## மார்கழி இரவின் பொழுதில்

பார் எங்கும் இருள்
கவ்விப் பிடிக்க...
பால்நிலவைத் தேடும்
அழகிய தருணமது!

விண் முழுவதும்
இரத்தினங்களாகப்
பிரகாசிக்கும்...
விண்மீன் கூட்டங்களின்
எழிலோ வார்த்தைகளால்
வர்ணிக்க முடியாதவை!

வெண்பஞ்சுத் துகள்களாய்
வெள்ளைமழை பொழியும்
பனித்துளிகளின் குதுகாலம்
பார்ப்பவர்களையும்...
பறக்கச் செய்து விடும்!

மௌனமாய் உறங்கும்
பூலோகத்துக்கு மேலே...
கருமை இரவானது
தன்னைக் குளிர் போர்வையால்
போர்த்தியபடி...
குழலூதிக் கொண்டிருக்கிறது!

மெல்லிசைத் தென்றலின்
மென்மையான வருடுதலால்...
நடனமாடிக் கொண்டிருக்கும்
நர்த்தனச் செடிகளின்
உற்சாகம்!

நீலவான ஓடையில்
நீந்தித் திரியும்
அன்னங்களாக...
ஆங்காங்கே சென்று
கொண்டிருக்கும்
முகில் கூட்டங்கள்!

அண்ணாந்து பார்த்தால்
அழகிய புன்னகையால்...
தன்னை அலங்கரிக்கும்
தங்க நிலவின் பிரகாசம்!

ரீங்காரம் செய்யும்
வண்டுகளின் ஓசையும்
ஒளி விளக்குடன் செல்லும்...
மின்மினிப்பூச்சிகளின்
விளையாட்டும்
இன்னிசை
இரவாய்...
இன்பமூட்டுகின்றன!

ஆமாம்!
அதுவொரு மார்கழி மாதம்
அழகிய இரவுடனான
சந்திப்பில்..

**பயாஸா பர்வீன்**
**பலஹத்துறை.**

## பேதங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியர்கள் ஒன்றிணைந்து இதனை ஒரு பொறுப்பாகவும் கடமையாகவும் கருத வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

சாதாரண மக்களுக்கு முன்னுரிமை வழங்குவதன் மூலம் உன்னத, நேரிய பயனுள்ள பொதுச் சேவையை வழங்குதல் போலவே நெறிமுறைகளைப் பேணுவதுடன், பொதுச் சொத்துக்கள் மற்றும் வளங்களை துஷ்பிரயோகம் செய்ய அனுமதிக்கக் கூடாது. நாட்டுக்கு செயல் திறமையோடு வினைத்திறனான சேவையை ஆற்ற வேண்டும். தனிநபர் இலாபத்தை விட நாட்டு மக்களின் நலனுக்காக கூட்டாக செயற்பட ஒன்றிணையுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

2025 ஆம் புத்தாண்டில் கடமைகளை ஆரம்பிக்கும் முகமாக இன்று(01) காலை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட உத்தியோகபூர்வ நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

சர்வமத தலைவர்களின் ஆசிர்வாதங்களுடன் மிகவும் நேர்த்தியான முறையில் இங்கு புது வருட கடமைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

தேசிய பத்திரிகையாக (மின்னிதழ்)
வாசகர்கள் மத்தியில் வலம்வருகின்ற
**"உதயம்"** பத்திரிகைக்கு தங்களின் பேராதரவை
எதிர்பார்ப்பதுடன் கீழுள்ள QR ஐ Scan செய்வதனூடாக எமது
வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து ஒவ்வொரு வெளியீட்டின்
பிரதிகளையும் இலவசமாக பார்வையிடலாம்...

அத்துடன், உங்களது பிரதேசங்களில் இடம்பெறும் செய்திகளையும்
எமது மின்னஞ்சல் ஊடாக எமக்கு அனுப்பி வைக்க முடியும்.

editor.uthayam@gmail.com

# இரத்தினபுரி மாவட்டத்தில் இடம்பெற்ற தேசிய மீலாது நபி விழா














**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

2024 ஆம் ஆண்டுக்கான தேசிய மீலாது நபிவிழா இரத்தினபுரி மாவட்டத்தை மையமாகக் கொண்டு இம்முறை 40 ஆவது தேசிய மீலாது நபி விழாவாகக் கொண்டாடப்பட்டது.

முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இரத்தினபுரி மாவட்ட செயலகம் மற்றும் சப்ரகமுவ மாகாண கல்வி திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

குறித்த மீலாது விழா அண்மையில் நாட்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் காரணமாக பிற்போடப்பட்டு சிறிய விழாவாக இடம்பெற்றது.

இரத்தினபுரி பள்ளிவாசல், இரத்தினபுரி ஜன்னத் பள்ளிவாசல், பலாங்கொடை பள்ளிவாசல் ஆகிய பள்ளிவாசல்களை நினைவுபடுத்தி இதன்போது தபால் தலை முத்திரையும் வெளியிடப்பட்டது.

இரத்தினபுரி மாவட்ட செயலாளர் வசந்த குணரத்ன தலைமையில், முஸ்லிம் கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸின் வழிகாட்டலில் இரத்தினபுரி சப்ரகமுவ மாகாண சபை கேட்போர் கூடத்தில் (26) வியாழக்கிழமை இடம் பெற்ற இந்நிகழ்வில், தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் டி. சுனில் ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

சப்ரகமுவ மாகாண பிரதி பிரதம செயலாளர் திலினி தர்மதாச, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சாமர பமுனுஆராச்சி, மாகாண கல்வி பணிப்பாளர் தர்ஷனி இத்தமல்கொட மற்றும் சப்ரகமுவ மாகாணத்தின் பிரதி, உதவி செயலாளர், தகவல் தொழில்நுட்ப செயலாளர், திட்டமிடல் செயலாளர், கல்வி உதவிச் செயலாளர், இரத்தினபுரி மாவட்டத்தின் உதவிச் செயலாளர், பிரதேச செயலாளர், முஸ்லிம் பள்ளிவாசல்களின் தலைவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், இரத்தினபுரி அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை இரத்தினபுரி மாவட்டத் தலைவர் உட்பட உறுப்பினர்கள், இரத்தினபுரி மாவட்ட முஸ்லிம் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், புத்தசாசன கலாசார அமைச்சின் சிரேஷ்ட செயலாளர் அசங்க ரத்னாயக்க, புத்தசாசன கலாசார செயலாளர், முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ், பிரதி, உதவிப் பணிப்பாளர்கள், மேலதிகப் பணிப்பாளர் உட்பட திணைக்களத்தின் கலாசார மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் சர்வமதத் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

ஒவ்வொரு வருடமும் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்ற மீலாது நபிவிழாவானது இம்முறை 40 ஆவது தேசிய மீலாது விழாவாக இரத்தினபுரி மாவட்டத்தில் இடம் பெற்றதோடு, இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பாடசாலைகளின் மாணவர்களுக்கிடையிலான கஸீதா, கிராஅத் மற்றும் கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 425 மாணவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசுத் தொகைகளும் இங்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் பாரம்பரிய இஸ்லாமிய கலை, கலாசார நிகழ்ச்சிகளும் நிகழ்வை மேலும் மெருகூட்டின.

மீலாது நபி விழா தொடர்பான விசேட உரையை அஷ்ஷெய்க் ரஸாத் ஸமானினால் நிகழ்த்தப்பட்டதுடன் நன்றியுரையை திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் வழங்கினார்.

இந்த 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய மீலாதுன் நபிவிழாவில், இரத்தினபுரி மாவட்டத்தில் இருபது முஸ்லிம் பள்ளிவாசல்களின் அபிவிருத்திக்காக 100 இலட்சம் ரூபா மத மற்றும் கலாசார விவகாரங்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்டது.

முஹம்மது நபியின் பிறந்த நாள் மற்றும் மறைவை நினைவுகூரும் வகையில் முஸ்லிம்கள் மீலாது நபி தினத்தைக் கொண்டாடுகின்றனர், அது தொடர்பாக இலங்கையில் ஒவ்வொரு ஆண்டும் மீலாது நபி தேசிய விழாவை நடத்தி அரசாங்கம் செயற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

## மனநலமும் ஆலோசனையும் 62

# நம்பிக்கை

எல்லோரும் நம்பிக்கையுடன் பிறப்பதில்லை. நம்பிக்கை நாம் பெறக்கூடியதும் பெறவேண்டியதுமான ஒரு அழகான திறன். நம்பிக்கை என்கின்ற வண்டியில் தான் எங்கள் வாழ்க்கை பயணிக்கிறது.

நாம் நம்மை நம்புவதன் மூலம், நம்மை ஏற்றுக் கொள்வதன் மூலம் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளும் பயணத்தை தொடங்கலாம்.

நாம் எல்லோராலும் விரும்பப்படவோ அல்லது ஏற்றுக்கொள்ளப்படவோ மாட்டோம் என்பதை முதலில் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். நம்பிக்கை மற்றவர்களிடம் இருந்து வரக்கூடியதல்ல. அது எமக்குள் இருந்து வெளிவரவேண்டியது. மற்றவர்களை விட எமக்கு நாம் உண்மையாக இருப்பதும் உறுதியாக இருப்பதும் நம்பிக்கை வெளிப்படுவதற்கான அடிப்படையாகும்.

நம்பிக்கையை வளர்ப்பது என்பது நேரம் எடுக்கும் ஒரு செயலாகும். அது சட்டென்று உருவாகுவதில்லை. மற்ற திறமைகளைப் போலவே இதற்கும் அன்றாட பயிற்சியும் தொடரான முயற்சியும் தேவைப்படுகிறது.

நாம் நமது ஆறுதல் வலயத்தில் சிக்குண்டு இருக்காமல் தொடர்ந்து முயற்சி செய்து, நாம் நம்மை ஊக்குவிக்க வேண்டும். நாம் எவ்வளவு அதிகமாக சாதிக்க முன் வருகிறோமோ அவ்வளவு நம்பிக்கையுடன் இருக்கும் நிலை உருவாகிவிடும்.

நாம் வெற்றியாளராக ஆகமுடியும் என்று நம்புவது அதை அடைவதற்கான முதல் படியாகும்.

நாம் பல விடயங்களை செய்ய ஆற்றல் பெற்றவர்கள். எம் ஒவ்வொருவருக்கும் அவரவருக்கு ஏற்ற ஆற்றல்கள், உள்திறமைகள் உள்ளன.

நாம் செய்ய வேண்டியதெல்லாம் நமது திறமைகளை அடையாளம் கண்டு அவற்றை செயலுருவில் கொண்டு வர திட்டமிடுவதாகும். நாம் நமது சொந்த திறன்கள் மீது நடவடிக்கை எடுத்தால் எந்த தடைகளை சந்தித்தாலும் அவற்றை எதிர்கொண்டு எமது இலக்கை அடையலாம்.

எங்களை நம்புவது என்பது எங்கள் சொந்த திறன்கள் மீது நம்பிக்கை வைப்பதாகும். எங்கள் சொந்த திறன்களை வெளிப்படுத்த எவ்வளவு நடவடிக்கை எடுக்கிறோமோ அவ்வளவுக்கு எங்கள் மீதான சந்தேகங்களும் வீணான அச்சங்களும் அகன்று விடும். இது நாம் ஆக்கப்பூர்வமான மனிதர்களாக ஆகிவிட வழிவகுக்கும்.

எங்கள் மீதான நம்பிக்கை – நாம் பெறுமதியானவர் என்ற உணர்வை ஏற்படுத்தும்.

– மதிப்பும் மரியாதையும் மிக்கவர் என்ற உணர்வை உருவாக்கும்.

– எமது இலக்குகளை அடைய நாம் தகுதியானவர் என்று நம்பும் போது அவை கடினமானவையாக இருந்தாலும் அவற்றை அடைவதற்கான ஆற்றல் கிடைக்கும்.

– நாம் உயர்வான உன்னதமான மனிதன் என்பதை நம்புவோம்

– நல்ல குணங்கள் எமக்குள் உண்டு என்று நம்புவோம்

– எதை செய்ய வேண்டும் என்ற ஆசை ஆர்வம் இருக்கிறதோ அதை செய்வதற்கான ஆற்றல்கள் எமக்குள் இருக்கின்றன என்று நம்புவோம்.

நான்... என்னோடு நேர்மையாகவும் தெளிவாகவும் இருக்கிறேன்.

இலக்குகளை நிர்ணயித்து அவற்றை அடையும் திறன்களை பெற்றிருக்கிறேன்.

நான் விரும்பும் இலக்கை அடையும் சாத்தியம் எனக்கு உண்டு.

நான் விரும்பும் வெற்றியை உருவாக்கும் திறன் எனக்கு உண்டு.

எதிர்காலத்தை நோக்கி சரியான நடவடிக்கை எடுக்க என்னிடம் அறிவும் ஆற்றலும் உண்டு.

என்று உறுதியாக நம்புவோம்.

இந்த நம்பிக்கை எங்களை சிகரத்தின் உச்சியை தொட வைத்து விடும்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்




பயாஸா பாஸில்

# வாழ்வதற்கே வாழ்க்கை!



நீங்கள் ஒரு உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். வாழ்க்கை என்பது வாழ்வதற்கே என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்..

நாம் எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும், எவ்வளவு சம்பாதித்தாலும், நம் வயிறுக்கு எவ்வளவு சாப்பிட முடியுமோ, அவ்வளவு தான் சாப்பிட முடியும். அதன் கொள்ளளவு அப்படித் தான்...

நீங்கள் எவ்வளவு ஓடியும், வாழ்க்கை எதற்காக வாழ்கின்றோம் என்று அறியாமல் மரணிக்கின்றோமே அதை விடக் கொடுமை ஒன்று இருக்க முடியாது.

நாம் எவ்வளவு பெரிய வசதி படைத்தவராக இருந்தாலும், நாம் உண்பதும், உடுத்துவதும். மட்டும் தான் நாம்.. சம்பாதித்ததில் அனுபவித்தது. மற்றவை அடுத்தவர்களுக்குத் தான்.

நாம் எல்லோரும் ஏதோ காரணமாகத் தான் உழைக்கிறோம் ஓடியாடி சம்பாதிக்கிறோம். ஆனால், அந்தக் காரணம் பிற்காலத்தில் வெற்றுக் காரணம் ஆகி விடுகிறது.

நிறைய பணம் சம்பாதிக்க வேண்டும்.. பிற்காலத்தில் உட்கார்ந்து சாப்பிடலாம். நம் பிள்ளைகள் உயர்ந்த நிலைக்கு வர வேண்டும். என்றெல்லாம் எண்ணி உழைக்கிறோம்.

சம்பாதித்தது போதும் ஓய்வெடுக்கலாம் என்று எண்ணுகிற போது உடல் நலம் கெட்டு இருக்கும்.

பிள்ளைகள் வசதி வாய்ப்புகளைப் பெற்று விட்டு ஒதுங்கி விடுவார்கள்.

வேறு சிலர் தேவைக்கு அதிகமாக ஆசைப்பட்டு அதற்காக உழைப்பார்கள்.

அம்முயற்சிகளில் தோல்வியுற்று வாழ்க்கையைத் தொலைப்பார்கள்.

நீங்கள் சற்று நிதானமாக உட்கார்ந்து, நன்றாக மூச்சை இழுத்து விட்டு, சுவையாகப் போட்ட இஞ்சி டீயை ஒரு மடக்கு அருந்திக் கொண்டு, வாழ்வின் யதார்த்தத்தை நினைத்துப் பாருங்கள்,

எத்தனையோ கோடி மக்கள் வந்து போன இந்த உலகத்திற்கு நாமும் வந்து இருக்கின்றோம். ஆனால் நமக்கு முன்பு வந்தவர்களை நினைத்துப் பாருங்கள்?

அவர்கள் வாழ்வின் யதார்த்தத்தை புரிந்து, உணர்ந்து, வாழ்க்கையை ஆனந்தமாக அனுபவித்து , நிம்மதியாகக் கண் மூடி போய் விட்டார்கள்.

ஆனால் நம்மால் ஒவ்வொரு இரவும் நிம்மதியாக உறங்கக் கூட முடியவில்லையே, ஏன்?

வாழ்க்கை (life style) அப்படியே மாறி விட்டது. இதற்குக் காரணம் இது இன்றைய சூழ்ச்சியாளர்களின் சூச்சம் என்பது தான் உண்மை.

ஆனால் நாம் தான் இன்னும் உணர்ந்த பாடு இல்லை அதை உணரும் போது நாம் இங்கே இருக்கப் போவது இல்லை.

ஆம், நண்பர்களே!

வாழும் போதே முழுமையான கவனத்துடன் நமது வாழ்க்கையைத் துவங்க வேண்டும்.

உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நாளையும், ஏன் ஒவ்வொரு நிமிடத்தையும், நாம் என்ன செய்யப் போகிறோம் என்று தீர்மானிப்பது நீங்கள் தான்.

விழிப்புணர்வோடு வாழ்க்கையை அணுகுங்கள். நன்றாகச் சிந்தித்து, வாழ்வின் யதார்த்தத்தை புரிந்து, ஆனந்தமாக வாழ்வதற்குக் கற்றுக் கொள்ளுங்கள்.

-Nuzha Razik-



# நான் அனுபவிக்காததெல்லாம் என் பிள்ளை அனுபவிக்கனும்

"எனக்கு கிடைக்காததெல்லாம் என் பிள்ளைக்கு கொடுக்கனும்.. நான் அனுபவிக்காததெல்லாம் என் பிள்ளை அனுபவிக்கனும்" என்று நிறைய பெற்றோர்கள் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன்..

அதே பெற்றோர்கள் ஒரு காலத்தில் "காலம் ரொம்ப கெட்டுப்போச்சு " என்று அங்கலாய்ப்பதையும் நான் பார்த்திருக்கிறேன்.

கெட்டதை எல்லாம் போட்டி போட்டுக்கொண்டு வசநனெ ஆகவும், fashion ஆகவும் செய்வதை தான் இன்றைய இளைய தலைமுறை விரும்புகிறது..

இந்த காலம் என்ன எல்லாம் நடக்கிறது என தெரிந்திருந்தும் பிள்ளைகளுக்கு அதீத செல்லம் கொடுத்து கஷ்டம் என்றதையே கண்ணுல காட்டாம வளர்க்கும் பெற்றோரை பார்க்கும் போது ஒரே நெருடலா இருக்கும்..

ஒரு பிள்ளை கேட்பதை எல்லாம் வாங்கிக் கொடுப்பதில் உங்களது பாசம் இல்லை..

உண்மைப் பாசம் என்பது யாதெனில் அந்த பிள்ளைக்கு நல்லதையும் கெட்டதையும் பிரித்தறிய அறிவை கொடுப்பதாகும்..

நாளை மறுமையில் அந்த பிள்ளை சுவன வாயிலில் உங்களை கட்டிப் பிடிக்க வேண்டும் என்று ஆவல் கொள்வதாகும்..

முடிந்தால் உங்களுக்கு கிடைக்காத குர்ஆனை உங்கள் பிள்ளைகளுக்கு கொடுங்கள் , அடித்துச் சொல்கிறேன் இறைவன் ஹிதாயத்தை கொடுக்க நாடினால் அவர்கள் வழி தவற மாட்டார்கள்.. !

And what is the life of this world except the enjoyment of delusion.

இவ்வுலக வாழ்க்கை மயக்கக் கூடிய (அற்ப) இன்பத்தைத் தவிர வேறில்லை. (3:185)





அரபாத் பஹர்தீன்

# பின்வரிசையின் சறுக்கலால்

## நியூஸிலாந்திடம் தொடரை இழந்தது

## இலங்கை

சுற்றுலா இலங்கை அணிக்கு எதிரான 2ஆவது போட்டியில் ஜேகப் டபியின் அசத்தலான பந்துவீச்சினால் 45 ;ஒட்டங்களால் இலகு வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி தொடரின் ஒரு போட்டி மீதமிருக்க 2:0 என தனாக்கி அசத்தியது.
இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரின் முதல் போட்டியில் இலகு வெற்றியை இலங்கை அணி கோட்டை விட்டிருக்க நியூஸிலாந்து அணி 8 ஓட்டங்களால் வெற்றி பெற்று தொடரில் 1:0 என முன்னிலை பெற்றிருந்தது.
இந்நிலையில் தீர்க்கமான 2ஆவது போட்டி 30ஆம் திகதி மவுன்ட் மவுங்குனி மைதானத்தில் இரவுப் போட்டியாக இடம்பெற்றது.
இப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்திருந்தது. இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 186 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் மார்க் சப்மேன் 42 ஓட்டங்களையும், றொபின்ஸன் மற்றும் மிச்சல் ஹெய் ஆகியோர் தலா 41 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் வனிந்து ஹசரங்க 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.
தொடர்ந்து 187 ஓட்டங்கள் என்ற சவாலான வெற்றி இலக்கினை நோக்கி பதிலளித்த இலங்கை அணிக்கு ஆரம்ப வீரரான குசல் மெண்டிஸ் 10 ஓட்டங்களுடன் வெளியேறி ஏமாற்றம் கொடுத்தார். இருப்பினும் மற்றைய ஆரம்ப வீரர் பெத்தும் நிஷங்க களத்திலிருந்து 3ஆம் இலக்க வீரரான குசல் பெரேராவுடன் இணைந்து வலுச்சேர்த்து பெத்தும் நிஷங்க 37 மற்றும் குசல் பெரேரா 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி சரிவை எதிர்கொண்டது. பின்னர் வந்த வீரர்களில் கமிந்து மெண்டிஸ் (7), அவிஷ்க பெர்ணாண்டோ (5), ஹசரங்க (1) மற்றும் அசலங்க (20) என மீண்டும் ஏமாற்றம் கொடுக்க, பின்வரிசை வீரர்களும் ஒற்றை இலக்கங்களுடன் பெவிலியன் திரும்ப 19.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 141 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. ஒரு கட்டத்தில் இலங்கை அணி 127 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்திருக்க வெறும் 14 ஓட்டங்களுக்கு மிகு 7 விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.
இதனால் நியூஸிலாந்து அணி 42 ஓட்டங்களால் வெற்றி பெற்றதுடன் தொடரின் 3ஆவதும், இறுதியுமான போட்டி மீதமிருக்க தொடரை 2:0 என கைப்பற்றி அசத்தியது நியூஸி லாந்து அணி. இப் போட்டியில் இளம் வேகப்பந்துவீச்சாளரான ஜேகப் டபி 15 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டுக்களை அள்ளிச் சுருட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# குறைந்த சராசரியில் 200 விக்கெட்டுக்களை

## அள்ளிச் சுருட்டிய பும்ரா

இந்திய அணியின் நட்சத்திர வேகப் பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 20க்கும் குறைவான சராசரியுடன் 200க்கும் மேற்பட்ட விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் பந்து வீச்சாளர் என்ற வரலாற்றைப் படைத்துள்ளார்.
மெல்போர்னில் நடந்து வரும் அவுஸ்திரேலியா அணிக்கு எதிரான போர்டர்-கவாஸ்கர் டெஸ்ட் தொடரின் நான்காம் போட்டியின் இன்றைய நான்காம் நாள் ஆட்டத்தின் போது அவர் இந்த சாதனையை படைத்துள்ளார்.
தனது 44வது டெஸ்ட் போட்டியில் விளையாடும் பும்ரா 19.38 சராசரியுடன் 202 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இதன் மூலம் மிகவும் குறைந்த சராசரியுடன் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 200க்கும் மேற்பட்ட விக்கெட்டுகளை வீழ்த்திய பந்து வீச்சாளர்களின் பட்டியலில் பும்ரா முதலிடத்தைப் பிடித்துள்ளார்.
அவருக்கு அடுத்த இடத்தில் மேற்கிந்திய தீவுகள் அணியின் மால்கம் மார்ஷல் (376 விக்கெட்டுகள் 20.94 சராசரி) ஜோயல் கார்னர் (259 விக்கெட்டுகள்இ 20.97 சராசரி) மற்றும் கர்ட்லி அம்ப்ரோஸ் (405 விக்கெட்டுகள்இ 20.99 சராசரி) ஆகிய மூவரும் உள்ளனர்.
டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது 200வது விக்கெட்டை பும்ரா இன்றைய ஆட்டத்தில் வீழ்த்தியிருந்தார். அவுஸ்திரேலியா அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் டிராவிஸ் ஹெட்டை வீழ்த்தியதன் மூலம் பும்ரா தனது 200வது விக்கெட்டை வீழ்த்தினார்.
அதே ஓவரில் மிட்செல் மார்ஷையும் ஓட்டங்கள் எதுவும் கொடுக்காமல் பும்ரா வீழ்த்தினார். இந்த ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டில் அதிக விக்கெட் எடுத்த வீரராகவும் பும்ரா மாறியுள்ளார்.
அவுஸ்திரேலியா அணிக்கு எதிராக ஐந்துப் போட்டிகள் கொண்ட தொடரில் இந்திய விளையாடி வரும் நிலையில் இதுவரை பும்ரா 29 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.
மேலும் டிராவிஸ் ஹெட்டை ஆட்டமிழக்கச் செய்ததன் மூலம் 200 டெஸ்ட் விக்கெட்டுகளை வேகமாக வீழ்த்திய இந்திய வேகப்பந்து வீச்சாளர் என்ற கபில் தேவின் சாதனையையும் பும்ரா முறியடித்தார்.
கபில் தேவ் 50வது போட்டியின் போது தனது 200வது டெஸ்ட் விக்கெட்டை வீழ்த்தியிருந்தார். எனினும் பும்ரா 44வது போட்டியிலேயே 200வது விக்கெட்டை வீழ்த்தி அசத்தியுள்ளார்.
டெஸ்ட் போட்டிகளில் 200 விக்கெட்டுகளை வேகமாக வீழ்த்திய இரண்டாவது இந்தியர் இவர்தான். முன்னாள் வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் 37 போட்டிகளுடன் இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.
2023-25ஆம் ஆண்டுக்காள உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் இதுவரை 14 போட்டிகளில் மொத்தம் 74 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ள பும்ரா உலக டெஸ்ட் சம்பியன் ஷிப்பின் ஒரே பதிப்பில் இந்தியாவுக்காக அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய அஷ்வின் சாதனையை முறியடித்தார்.
2019-21 உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் 14 போட்டிகளில் 71 விக்கெட்டுகளை அஸ்வின் வீழ்த்தினார்.
எவ்வாறாயினும் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் ஒரே பதிப்பில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர்களின் பட்டியிலில் அவுஸ்திரேலியாவின் நேதன் லயன் முதலிடத்தில் உள்ளார்.
அவர் 2021-23 பதிப்பில் 20 போட்டிகளில் 88 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொக்ஸிங் டே டெஸ்ட் :



## அவுஸ்திரேலியாவிடம் மண்டியிட்டது இந்தியா

இந்திய அணிக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் 4ஆவது போட்டியில் 184 ஓட்டங்களால் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி தொடரில் 2:1 என முன்னிலை பெற்றது.
இவ்விரு அணிகளுக்கும் இடையிலான உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் அங்கமான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றிருக்க . 2ஆவது போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்று தொடரை 1:1 என சமன் செய்திருந்தது. பின்னர் இடம்பெற்ற 3ஆவது போட்டி சமநிலையடைய தொடர் சமநிலையில் தொடந்தது.
இந்நிலையில் தொடரின் 4ஆவது போட்டி பொக்ஷிங் டே டெஸ்ட் ஆட்டமாக உலகப்புகழ் பெற்ற மெல்போர்ன் மைதானத்தில் கடந்த 26ஆம் திகதி ஆரம்பித்திருந்தது.
இப்போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்திருந்தது. இதற்கமைய முதல் இன்னிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 474 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் ஸ்டீபன் ஸ்மித் 140 ஓட்டங்களையும், லபுசங்கே , கென்ஸ்டஸ் மற்றும் கவாஸா ஆகியோர் தலா 72, 60 மற்றும் 57 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் பும்ரா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.
பின்னர் தமது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு இளம் வீரரான நிடிஷ் குமார் கன்னிச் சதம் கடந்து 114 ஓட்டங்களையும், ஜாய்ஸ்வால் 82 ஓட்டங்களையும், வாசிங்டன் சுந்தர் 50 ஓட்டங்களையும் சேர்த்துக் கொடுக்க 369 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் பறி கொடுத்தது. பந்துவிச்சில் கமின்ஸ், போலன்ட் மற்றும் லியென் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை அள்ளிச் சுருட்டினர்.
தொடர்ந்து 105 ஓட்டங்கள் முதல் இன்னிங்ஸ் முன்னிலையுடன் 2ஆம் இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலிய அணி 234 ஓட்டங்களுக்குள் சுருண்டது. துடுப்பாட்டத்தில் லபுசங்கே 70 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் பும்ரா 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.
இதனால் இந்திய அணிக்கு இறுதி நாளில் 369 ஓட்டங்கள் வெற்றி அலக்காக நிர்ணயிக்கப்பட்டதமது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணிக்கு அனுபவ வீரர்களான ரேஹித் (9) ராகுல் (0) , கோஹ்லி (5) ஜடேஜா (2) என விரைவாகப் பெவிலியன் திரும்பி ஏமாற்றம் கொடுத்தனர். ஆரம்ப இளம் வீரரான ஜாய்ஸ்வால் தனித்துப் பொராடி அரைச்சதம் கடந்து 84 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, பான்ட் 30 ஓட்டங்களுடன் நடையைக் கட்ட, முதல் இன்னிங்ஸ ில் சதம் அடித்த நிடிஷ் குமார் டக் அவுட் ஆகி வெளியேற பின்வரிசை நிலைக்காமல் போக இந்திய அணி 155 ஓட்டங்களுக்குள் சுருண்டு போக அவுஸ்திரெலிய அணி 184 ஓட்டங்களால் வெற்றி பெற்றதுடன் தொடரில் 2:1 என முன்னிலை பெற்றது. பந்துவீச்சில் கமின்ஸ் மற்றும் போலன்ட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர். போட்டியின் நாயகனாக பெட் கமின்ஸ் தெரிவானார்.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.